3825

செந்தமிழ்

தொகுதி—74 செப்டம்பர் 1980 பகுதி—3

மதுரைத் தமிழ்ச் சங்கம்
THE MADURA TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

ஆசிரியர் :
டி. பி. எம். பெரியசுவாமி

செந்தமிழ்

தொகுதி - 74 | செப்டம்பர் 1980 | பகுதி—3

உள்ளுரை

எண்	பொருள்	பக்கம்
1.	ஸ்ரீமத் தாயுமான சுவாமிகள் வரலாறும் அவர் மதக் கொள்கையும்	110
2.	நாட்டுத் தெய்வங்கள் —க. சின்னப்பா	116
3.	தொல்காப்பியரின் பலர்பால் விகுதி 'ப' —ச. சுபாஸ் சந்திரபோஸ்	121
4.	இலக்கியத்தில் இமயமலை — கு. சதாசிவன்	126
5.	"ஐயாறதனிற் சைவனாகியும்"	136
6.	சேரமாபு — பண்டித. இராம. சுப்பிரமணிய நாவலர்	139
7.	செய்திக்கதிர்	146

—oOo—

ஆசிரியர் பக்கம்

அன்புடையீர்! வணக்கம்.

வருகிற 1981-ஜனவரியில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு மதுரையில் நடைபெற உள்ளது. மாநாட்டுக்கு வருகை தரும் மொழி பெயர் தேயத்துத் தமிழ் அன்பர்களும் செந்தமிழ் இதழி-ஜனப் பார்க்கவும், படிக்கவும் வாய்ப்பு ஏற்படும். எனவே வருகிற டிசம்பர் இதழிஜன உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு மலராக வெளியிடும் நோக்கம் உள்ளது. தமிழகக் கலாச்சாரம், பண்-பாடு, வரலாறு ஆகியன பற்றி சிறப்புக் கட்டுரைகளும், கவிதைகளும் இடம் பெறும் தமிழன்பர்களின் கருத்துவளம் காட்டுதற்கு இது ஒரு நல்வாய்ப்பு. எழுத்தாளர்கள் இவ்வாய்ப்பிஜனப் பயன்-படுத்திக் கொள்ள வேண்டுகிறோம்.

வழக்கமான கட்டுரைகளேயன்றி நூல் மதிப்புரையும் இவ்விதழில் இடம் பெறுகின்றது.

வணக்கம்.

ஸ்ரீமத் தாயுமான சுவாமிகள் வரலாறும் அவர் மதக் கொள்கையும்*

சோழநாட்டின்கண் பாடல் பெற்ற ஸ்தலங்களுட் சிறப்புற்றோங்கிய திருமறைக்காடென்னுந் தென்மொழிப்பெயர் பெற்ற வேதாரணியம் என்ற திவ்விய க்ஷேத்திரத்தில் சுமார் இருநூற்றுமுப்பது வருஷங்களுக்கு முன் வேளாண் குலத்துத் தோன்றிய கேடிலியப்பபிள்ளை என்பார் ஒருவர் இருந்தார். அவர் கல்வி கேள்விகளில் முதிர்ந்து சிவபக்தி அடியார் பக்தியிற் சிறந்து வேதங்களாற் பூசிக்கப் பெற்ற தம்மூர்ச் சிவன்கோயில் தருமவிசாரணைத் தொழிலில் அமர்ந்திருந்தனர். அப்போது விஜய நகர ராஜ்ஜியத்தின் பிரதிநிதியாய் மதுரை முதலிய தென்னுடாண்ட திருமலைநாயக்கருக்குப் பவுத்திரராய்த் திரிசிரபுரத்திற் றங்கிச் சோழநாட்டையும் பாண்டிய நாட்டையும் கி.பி. 1704 வருஷமுதல் 1731 வருஷம் வரையில் அரசாண்ட விஜயரங்க சொக்கநாதநாயக்கர் என்பவர் கேடிலியப்பப் பிள்ளையவர்களின் திறமையினையும் குணத்தையுங் கேள்வியுற்று அவர்தமை வரவழைத்து அவர்தமக்குப் பெரியதோர் உத்தியோகந் தந்து தம்மிடத்திலே அவரை அமர்த்திக் கொண்டனர். பிள்ளையவர்களும் தம்மரையன் மகிழ்வுறுமாறு இராஜாங்க காரியத்தைச் செவ்வனே நடாத்திக் கொண்டு வந்தனர். வேதாரணியத்திலேயிருந்த தமது தமையனுர் சந்ததியின்றித் துயருறுவது கண்டு தம்முடைய அருமைப் புதல்வராகிய சிவசிதம்பரம் பிள்ளையைத் தமையனுருக்குச் சுவீகாரமாகக் கொடுத்து விட்டார். தாம் கதிபெறத் தமக்குமோர் புத்திரன் வேண்டுமென்னும் விருப்பத்தால் தட்சிண கைலாயத்துள் ஒன்ருகிய திரிசிரமலைக்கண்ணெழுந்தருளியிராநின்ற தாயுமானேசுரரைத் தினந்தோறும் திரிகரணத்தாலும் தம் தேவிசகிதம் வழுத்தி வருவாராயினுர் சின்னுளிலேயே சிவனது திருவருளால் தம் மனைவிமார் ஓர் ஆண் மகவைப் பெற்றனர் அவர்தமக்குத் தநயன் பிறந்த தலம் திருமறைக் காடாயினும் திரிசிரபுரத்தீசரது திருவருளாற்ருேன்றியதனல் அக்குழந்தைக்குத் தாயுமானவர் என்னும் பெயரே இடப்பட்டது. இக்குழந்தைக்குத் தக்க காலத்தில் வித்தியாரம்பஞ் செய்விக்கவே, சின்னுளிலேயே வடமொழி தென்மொழிக் கண்ணுள்ள இலக்கியவிலக்கணங்களையும் வேதாகஸ்மிருதிபுராண இதிகாச முதலியனவற்றையும் நன்கு கற்று மிக்க வல்லவராயினர். இவையேயன்றித் தேவார திருவாசக முதலிய பன்னிரண்டு சைவத்திருமுறைகளையும் மெய்கண்ட சாத்திரமெனப் பெயர் பெற்ற

* செந்தமிழ் - தொகுதி 3 - பகுதி 12.

பதினன்கு சித்தாந்த சாத்திரங்களையும் அருணகிரிநாதரருளிய திருப்புகழையும் பாராயணஞ்செய்து வருவாராயினர். இவர் இருமுதுமொழியிலும் மிகுந்த பயிற்சியுடையாரென்பது பின்வரும் இவருடைய செய்யுளால் தெரியவரும்

கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றும் அறிவில்லாத என்
கர்மத்தை என் சொல்கேன் மதியையென் சொல்லுகேன்?
கைவல்ய ஞானநீதி

நல்லோருரைக்கிலோ கர்ம முக்கியமென்று
நாட்டுவேன் கர்மமொருவன்
நாட்டினலோ பழைய ஞான முக்கியமென்று
நவிலுவேன் வடமொழியிலே

வல்லாளெருத்தன் வரவுந்த்ரா விடத்திலே
வந்ததா விவகரிப்பேன்
வல்லதமிழறிஞர்வரின் அங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிது புகல்வேன்;

வெல்லாமலெவரையும் மருட்டிவிட வகைவந்த
வித்தையென் முத்தி தருமோ?
வேதாந்தசித்தாந்த சமரச நன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர் கணமே.

தாயுமானவர் மிக்க இளமையிலேயே அவர்தம், தந்தையினும் பல்லாற்ருனும் சிறப்புற்றிருக்கின்றதை அரசன் கேள்வியுற்று மிக்க மகிழ்வுற்றனன் தாயுமானவர் தமக்குப் பதினுருண்டு நிரம்பு முன் தமது தந்தையார் சிவசாயுஜ்யமுற்ற பிறகு உடனே அரசனது பலாத்காரத்துக்கிணங்கித் தகப்பனருடைய உத்தியோகத்தைத் தாம் வகித்துக் காரியங்களைச் செவ்வனே நடாத்திவந்தார் இவ்வாறு லௌகிகத் தொழிலையேற்று நடத்திவந்தபோதிலும் அவரது மனமோ ஆன்ம ஞானம் பெற்று உயிர்க்கோருறுதிதேடும் வழியை நாடிநின்றது. இவர்க்கு இருவினையொப்பு நேருங்காலமாதல்பற்றி உண்மையாராய்தலே ஒரு பெருங் கடமையெனத் தோற்றிற்று; அரசனிடத்தில் பரிசில் பெறவிரும்பிவரும் பண்டிதர், பாரதி, பாவலர், கவி, கவிராஜர், கவிச்சக்கரவர்த்தி, நாவலர், வித்துவான், மஹாவித்வான், வித்வசிரோமணி முதலிய பலவிதப் பட்டங்களைத் தரித்தவர்களையும் தம் அரு-

கழைத்து அவரோடு யதார்த்தவாதஞ் செய்து தாம் கேட்கும் கேள்வி-களுக்குத் தக்க விடை சமாதானம் சொல்ல வல்லமையின்றி அவர்-களிருப்பதைக் கண்டு "ஐயன்மீர்! ஆய்ந்து உண்மை காணுதிர்" என விடுப்பர். இவர் தாமும் தமது சந்தேக விபரீதங்களைத் தீர்க்கக்-கூடிய ஞானசிரியர் எங்குளர்? எப்போது நம் கண்ணுக்குப் புலப்-படுவர்' என்று மனமுடைந்து எதிர்பார்த்த வண்ணமாயிருந்தனர்,

அப்படியிருக்கும் நாளில் உலகமுய்யுமாறு சித்தாந்தப் பொருளைத் திருமந்திரத்தாற் காட்டிய திருமூல நாயனர் மரபிலுதித்துத் திருக்கயிலாய பரம்பரை சந்தான குரவருள் ஒருவராகிய மெய்கண்ட தேவரது வழித்தோன்றிய குரவர் ஒருவரிடத்து ஞானோபதேசம் பெற்ற சற்குரு மூர்த்தியாகிய மௌனகுருசுவாமிகள் திரிசிரபுரத்திற் கோயில் கண்டருளிய தாயுமான சுவாமிகளைப் பார்த்து திரிசிரபுரம் போந்தனர். குருசுவாமிகளைக் கண்டபோதே நமது தாயுமானவர் தன் வயமிழந்து அவர் வயப்பட்டு அடியற்றமரம் போல அவர் பாதத்தில் வீழ்ந்து அவரை நமஸ்கரித்து 'ஐய! எம்பெரும்! தமது திருக்கரத்-திலுள்ள புத்தகம் யாது?' என்றிருந்தனர். மௌன குருசுவாமிகள் யாதொன்று முரையாமல் மௌனமாயேகினர். இவரும் மேன்மேலும் இரந்து அவரைப் பின்றொடர்ந்தனர். மௌனகுரு சுவாமிகள் இங்கு-மங்குஞ் சென்று இறுதியில் நடுநிசிவேளையில் தாயுமானேசுரர் கோயில் புக்கு பத்மாசனமிட்டு உட்கார்ந்தனர். உட்கார்ந்ததும் எதிரிற் கைகட்டி வாய்பொத்தி நின்ற தாயுமானவரைக் கண்டனர். பின்பு அருள்நோக்குடன் குருசுவாமிகள் தாயுமானவரைப் பார்த்து அவர் மனத்தை அறிந்து பின்னர், எனது கையில் உள்ளது சிவஞான சித்தி என்றனர் ஐயமுற்ற சீடரும் சற்று மயங்கி நின்று ஐய! தயாநிதி!

1. சிவம் யாது?

2. ஞானம் என்பது எது?

3 சித்தியாவது யாது? என்று வினவ, ஆசாரிய சுவாமிகள்

ஏ. மாணவ!

1. சிவம் என்பது பதி

2. ஞானம் என்பது (அந்தப்பதியை உள்ளவாறறியும்) அறிவு.

3. சித்தியாவது அவ்வறிவை மருவியது என்றூர்

தாயுமானவர் தமக்கிருந்த ஐயங்களையெல்லாம் குருசுவாமி-களிடம் வெளிப்படுத்தவே அவர் இவருடைய பக்குவத்திற்குரிய தீக்ஷை செய்து, மாணவ' நின்னகத்து நிகழ்ந்த ஐயங்களை யறுத்து விபரீதங்களை விரட்டி உண்மையறிவாகிய அத்துவித ஞானத்தைக் கொடுப்பது இந் (சிவஞானசித்தியார் நூலேயாகும். இது சந்தான குருவருள் சகலாகம பண்டிதர் என்னும் அருணந்தி சிவாசாரிய சுவாமி களால் அருளப்பட்டது. சிவஞானபோத வழிநூலாகிய இது, வேதாகம சாரமாகிய சித்தாந்த வியல்புகளை எடுத்து ஸ்தாபித்தலாற் சுபக்கம் என்-றும், அதற்கு ஒவ்வாத சமயக்கொள்கைகளை எடுத்துக் கண்டனஞ் செய்தலாற் பரபக்கம் என்றும் சொல்லப்பட்ட இருபகுதிகளையுடைத்து

''பாரிலுள்ள நூல்களெல்லாம் பார்த்தறியச்
சித்தியிலேயோர் விருத்தப் பாதிபோதும்''

என்று சித்தியாரையும் மற்றுமுள்ள சித்தாந்த சாத்திரங்களின் பொருணுட்பங்களையும் சாங்கோபாங்கமாக உபதேசித்தருளினர். இதனுனே, வைதிக, சைவ சுத்தாத்துவித சைவ சித்தாந்தமே உண்மைநிலையென்பதும் சிவபெருமானே பரமபதியென்பதும் அவருடன் இரண்டறக் கலத்தலே அத்துவித முத்தியென்பதும் அறிந்தார். குரு-சுவாமிகள் இவரை நோக்கி 'இங்கு இன்னுஞ் சிலகாலமிருந்து இல்லறத் தொழுகிப் புத்திரசந்தானம் பெறுதி; பின்னர் யாம்வந்து நிட்டை கூடுமுபாயம் தெரிவிப்போம்' என்று சொல்லி விட்டேகினர். குருவின் பிரிவையாற்ருது வருந்தி நின்ற தாயுமானவரை நோக்கி மௌன குருசுவாமிகள் 'சும்மா இரு' என்று சொல்லிப் போய்விட்-டனர். அச்சொல்லும் சொல்லின் பொருளும் அவரும் அவர் மனத்தை விட்டகலவேயில்லை. என்னை?

ஐந்துவகையாகின்ற பூதமுதல்நாதமும்
அடங்கவெளியாக வெளிசெய்
தறியாமையறிவாதி பிரிவாக அறிவார்கள்
அறிவாக நின்றநிலையில்

சிந்தையற நில்லென்று சும்மா இருத்திமேல்
சின்மயானந்த வெள்ளந்
தேக்கித்திளைத்துநான் அதுவா யிருக்கநீ
செய்சித்ர மிக நன்றுகாண்

எந்தைவட வாற்பரம குருவாழ்க வாழஅரு
ளியநந்தி மரபு வாழ்க
என்றடியர் மனமகிழ வேதாகமத்துணி
பிரண்டில்லை யொன்றென்னவே

வந்தகுருவே வீறு சிவஞானசித்திநெறி
மௌனோப தேசகுருவே
மந்தரகுரு வேயோக தந்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌன குருவே!

என்னும் மௌனகுரு வணக்கத்துள்ள இச் செய்யுளையும் ஆங்காங்கு மற்றைச் செய்யுள்களில் எடுத்துக் கூறியிருப்பனவற்றையும் உற்று நோக்குக.

ஆசிரியர் சென்றதும் தாயுமானவர் தாம் உபதேசம் பெற்றவைகளைச் சிந்தித்து அவ்வாறு ஒழுகிவரலால் விரக்தி தோன்றியது. தோன்றவே லௌகிகத் தொழிலை அறவே மறந்தனர். அரசன் இவருடைய குணங்களை அறிந்திருப்பவனுதலாலும் நாளுக்குநாள் அவர் ஆன்மஞானம் பெற்று முதிர்ச்சியடைந்து வருகிருர் எனக் கேள்விபட்டிருக்கிறமையாலும் அவர்பால் அன்பும் அச்சமும் மீதூர அவரை அணுகி ''சுவாமி இத்தேவரீரது பெருமையை அறியகில்லாது நிரந்தரமில்லாத இந்த லௌகிகத்தொழிலில் தங்களையமர்த்தினேன்; தேவரீருக்கு யானே எல்லாயேவலும் புரியும்படி கட்டளையிடுமின்'' என்றிரந்து நின்று அன்றுமுதல் அவர் மனம் மிகவும் சந்தோஷமடையும்படி நடந்து வந்தான். சின்னுளில் அரசனும் இவ்வுலகை நீத்தான். அரசனது மனைவியாகிய மீனுக்ஷியம்மையோ இவரைப் பன்முறையும் பார்த்துளாள் ஆகலின் கண்கவர் வனப்பினர் இவரை நிகர்த்தவர் வேறெவரையுங் காணுது இவர் மீது காதலுற்று இவரை வரவழைத்து ''என்னிராஜ்யத்திற்குத் தேவரீரைத் தலைவராக்குவல்; என்உடல் பொருள் ஆவி மூன்றுந் தந்துவிட்டேன்'' என்னலும் அவளது எண்ணமின்னதென அறிந்து அவளுக்கு எவ்வாறு புத்தி புகட்ட வேண்டுமோ அவ்வாறு இதோபதேசம் செய்து பிறகு அவ்விடமிருந்தால் தன் பெருமைக்குச் சிறுமை வருமென்றஞ்சி அதைவிட்டு இராமநாதபுரத்திற்கருகிலுள்ள மேவை நகரிற் சென்று உறைந்தனர். இதனைக் கேள்வியுற்றுத் தமது தமையனுராகிய சிவசிதம்பரப்பிள்ளையவர்களும் தமது சிறிய தாயார் குமாரராகிய அருளையப்பிள்ளையவர்களும் இராம நாதபுரஞ் சென்று பிறகு அவரையணுகிச் சந்ததி விளங்கும்படித் திரு-

மணஞ் செய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். சம்சார பந்தத்தில் கட்டுண்டிருப்பதற்கு அவருக்கில்லாமற் போனபோதிலும் மௌன குருசுவாமிகள் ஆஞ்ஞையும் தமையனரது வேண்டுகோளையும் நிராகரிப்பதற்கில்லாது மன்றல் புரிந்து மனையாளொடுமில்லறம் நடாத்த விழைந்தனர். அவர் தேவியும் ஒரு ஆண் குழந்தையைப்பெற்ற பின் சிவபதமடைந்தனர்; அக்குழந்தைக்குக் கனகசபாபதி எனப் பெயரிடப்பட்டது.

முன் தாயுமானவரை விட்டுப் பிரிந்த குருசுவாமிகள் மீண்டும் வந்து சீடர் பக்குவத்தைக்கண்டு சரியையும் கிரியையும் கடந்து யோக பாதசோபான முற்றதையறிந்து அதற்குரிய தீட்சை செய்து, யோக நிட்டைகளினியல்புகளை உணர்த்தித் துறவு பூணும்படி ஆஞ்ஞாபித்துச் சென்றனர். அன்றுமுதல் தாயுமானவர் கௌபீனதாரியாய் வெளிப்பட்டு, இமயம், நியமம், ஆதனம், பிராணயாம் என்னும் யோகத்திற் சரியையும் பிரத்தியாகாரம் தாரணை என்னும் யோகத்திற் கிரியையும் கியானமாம் யோகத்தில் யோகத்தையும் சமாதியாம் யோகத்தில் ஞானத்தையும் முறையே யனுஷ்டித்துச் சிவஞானப் பெருஞ்செல்வராய் நிட்டை கூடுவாராயினர். இவர் 1742 ஆம் வருடம் இராமநாதபுரத்திற்கருகிலுள்ள தேவை நகரில் சமாதியிலமர்ந்தனரென்ப.

(இன்னும் வரும்)

நாட்டுத் தெய்வங்கள்

காளியம்மன் 5.

க. சின்னப்பா
செந்தமிழ்க் கல்லூரி

சென்ற இதழ் தொடர்ச்சி

பொங்கலன்று மாலையில் பொங்கல் வைக்க விரும்பிய குடும்பத்தார்கள் அனைவரும் அம்மன் கோவில் முன்னால் வந்து பொங்கல் வைக்க வேண்டும். இதற்காக உச்சிப் பொழுதிலேயே ஆண்களும் பெண்களும் அடுப்புப் போட முந்துகின்றனர். தங்கள் அடுப்புத்தான் என்பதற்கு அடையாளங்கள் வைத்துவிட்டுச் செல்லுதலும் உண்டு. பொங்கல் வைப்பதற்கு முன்னால்

(1) பொங்கல் பானை அழைத்தல்

(2) கோவில் முன் சிற்சில பெரியோர்கட்கு மாலை அணிவித்தல்

(3) தலைமைக் குடும்பத்தினருக்கு விபூதியளித்தல் - என்ற சடங்குகள் நிகழும் பரம்பரையாகப் பின்பற்றப்பட்ட மரபு இம்மூன்றிற்கும் கடைப்பிடிக்கப் பெறும். மரபு மீறிய மிகச்சிறிய தவறு ஏற்பட்டாலும் பெருங்கூச்சல் ஏற்பட்டு அடிதடியில் சென்று முடியக் கூடும். எனவே மரபு மீறாமல் இருத்தலில் பெரியோர் பெருங்கவனம் செலுத்துகின்றனர்.

i) பொங்கல்பானை முதலில் பூசாரி வீட்டிலிருந்தும், அடுத்தாற் போன்று மணியகாரர் வீட்டிலிருந்தும், மூன்றாவதாகத் தண்டல்காரர் வீட்டிலிருந்தும், நான்காவதாக நாட்டாண்மைக்காரர் வீட்டிலிருந்தும், ஐந்தாவதாக ஊர்ப்பொதுப் பெரியவர் வீட்டிலிருந்தும் இதன்பிறகு கொத்துக்கள் வாரியாகவும் கோவிலிலிருந்து செல்லும் மேளதாள வாத்தியக்காரர்களால் அழைத்து வரப்படுகிறது.

ii) பொங்கல் பானை அழைப்பு நிகழ்ச்சி முடிந்த பிறகு மேலே சொல்லப் பெற்ற பெரியவர்கள் ஐவருக்கும் கொத்துக்களின் தலைவர்களுக்கும் மாலை அணிவிக்கப் பெறும்.

iii) விபூதியளித்தல் என்ற சடங்கில் கிராமத்தோடு தொடர்பு இல்லாத வெளியூர்க்காரர்களுக்கு முதல் மரியாதையும் பங்காளிகளாகச் சேர்ந்து வணங்கும் கோவில்களாக இருந்தால் அவர்களுடைய மாமன் மைத்துனர்களுக்கு இரண்டாவது மரியாதையும், மாலை மரியாதை பெற்றுக் கொண்டவர்களுக்கு மூன்ருவதாகவும் அதன்பிறகு அனை-வருக்கும் விபூதி வழங்கப் பெறுகிறது.

இச் சடங்குகள் முடிந்த பிறகுதான் பொங்கல் வைப்பதற்காக அடுப்புக்கள் மூட்டப் பெற வேண்டும். சில கிராமங்களில் ஊருக்கு வெளியே அமைந்திருக்கின்ற அம்மன் கோவிலுக்குப் பொங்கல் பானைகளை ஊர்வலமாக எடுத்துக் சென்று பொங்கல் வைக்கின்றனர். அவ் ஊர்வலத்தின் போது மாட்டாட்டம், மயிலாட்டம் போன்ற கிராமியக் கலைகள் இடம் பெறுவதுண்டு. பெண்கள் பொங்கல் வைத்துக் கொண்டிருக்கும் போது அவர்களுக்குத் துணையாக இருக்கின்ற ஆண்கள் தவிர மற்றவர்கள் கோவிலுக்கு வெளியே பல்வேறு பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் மகிழ்ச்சியாக ஈடுபடுகின்றனர். காசு வைத்துச் சீட்டாடுவது - அதாவது சூதாடுவது அப்போதைய முக்கியமான பொழுது போக்கு.

பொங்கல் வைப்பதற்கு அடையாளமாகவும், பிறகு அதனை அடுப்பை விட்டு இறக்குவதற்கு அடையாளமாகவும் குலவைகள் ஒலிக்கப் பெறுகின்றன. கோவில் பூசைக்காக ஒவ்வொரு பானை-யிலிருந்தும் ஒரு அகப்பைப் பொங்கலைப் பூசாரி எடுத்துக் கொண்டு செல்லுகிருர். அம்மனுக்கு மீண்டும் தேங்காய் உடைத்துக் கற்பூர ஆரத்தி காட்டப்படுகிறது. அதே நேரத்தில் பொங்கல் வைத்து முடித்த ஒவ்வொரு குடும்பத்தாரும் தங்களது அடுப்பருகே வாழை இலையை விரித்து அதில் மூன்று கரண்டிப் பொங்கலைத் தனித்தனியாக வைத்து அதன் மீது ஒவ்வொருவாழைப் பழங்களை உரித்துச்செங்குத்தாக நட்டுவைத்துத் தேங்காய் உடைத்துப் பத்தி கொளுத்திச் சாம்பராணிப் புகை கமழப் பொங்கல் பானைக்குக் கற்பூரம் காட்டுகின்றனர்.

இதற்குத் தலுகை இடுதல் என்று பெயர்.

இதைத் தொடர்ந்து கோவிலது முன் வாசலில் பலியாடுகள் கொண்டு வந்து நிறுத்தப் பெறுகின்றன. ஆடுகளைப் பலியிடுவதில் கைதேர்ந்த ஒருவர் நீண்ட அரிவாளோடு வந்து நிற்கிருர். பூசாரி

வந்து அவருக்கு விபூதி இடுகிறார். சில கிராமங்களில் பூசாரியே ஆடுகளை வெட்டிப் பலியிடுதலும் உண்டு ஆட்டுக்கடா வெட்டுபவருக்கு முன்னால் ஒவ்வொரு ஆடுகளாகக் கொண்டு வந்து நிறுத்துகின்றனர். மஞ்சள் நீர். ஆட்டினுடைய தலையில் தெளிக்கப் பெறுகிறது. ஆடு கடைசியாகத் தன்னுடைய தலையைக் குலுக்கத் தலை தனியே வீழ்கிறது. தேங்காய் உடைக்கும் போது சரிபாதியாக உடையவில்லை என்றால் எவ்வாறு அபசகுனமாகக் கருதுகின்றார்களோ அதேபோன்று ஒரே வெட்டில் ஆட்டினுடைய தலைசரியாகத்துண்டிக்கப்படவில்லை யென்றாலும் தீயநிமித்தமாகக் கருதுகின்றார்கள். சேவல்களும் சிலரால் பலியிடப்-படுகின்றன. ஆடு கோழி இவற்றின் ஆண் இனங்களே பலியிடப்-படுகின்றன. பெண் இனங்களைப் பலி இடுவது மரபு அன்று. இனப் பெருக்கத்திற்குப் பெண் இனங்களே பெரிதும் பயன்பெறுவதே, இதற்குக் காரணமாய் இருக்கலாம். குறைந்தது பத்து அல்லது பதினைந்து கடாக்கள் பலியிடப் பெறுகின்றன. கீழே விழுந்த தலையை எடுத்து அத்தலைக்குரிய ஆட்டின் முன்பக்க வலதுகாலை ஒடித்து வாயைப் பிளந்து காலைச் செருகிக் கோவிலைப் பார்த்தாற் போன்று சிறிது நேரம் வைக்கின்றனர். அத்தலையும் காலும் பூசாரிக்குச் சொந்தம். பத்துப் பதினைந்து தலைகளையும் கால்களையும் பூசாரி என்ன செய்ய முடியும்? அதற்கு ஈடாகத் தலைக்கு 1 அல்லது 2 ரூபாய் கொடுத்து விட்டு ஆட்டிற்குச் சொந்தக்காரர்களே அவரவர்கள் வீட்டிற்குத் தலையையும் உடலையும் தூக்கிச் செல்லுகின்றனர் அதே நேரத்தில் நேர்த்திக்கடன் செய்வோர் தங்கள் குழந்தைகளுக்கு மொட்டை எடுத்தல் காதுகுத்துதல் ஆகிய சடங்குகளைக் கோவில் மேட்டிலேயே நிகழ்த்துகின்றனர் வெட்டப் பெற்ற ஆடுகள் அன்று இரவே உரிக்கப் பெற்றுக் கிராமத்தில் விற்பனை யாகி விடுகின்றன. பூசை முடிந்த பிறகு பொங்கல் பானைகள் மேளதாளங்களோடு வீடுகள் போய்ச் சேரு-கின்றன. அன்றைய நிகழ்ச்சிகள் அத்தோடு முடிவடைகின்றன.

மூன்றாம் நாள் நிகழ்ச்சி சனிக்கிழமையன்று மாலை ஆறு மணியளவில் தொடர்கின்றது. அன்றும் அம்மனுக்கு திருமுழுக்காட்டு நிகழ்விக்கப் பெற்று அம்மனின் உருவமும் நன்கு அலங்கரிக்கப்படுகிறது; கோவிலைச்சுற்றி எண்ணெய்த் தீபங்கள் ஒளிருகின்றன. பெண்கள் மாவிளக்கு எடுக்கின்றனர். மாவிளக்கு என்பது பச்சரிசி அல்லது தினைமாவைப் பக்குவமாக நீர் கலந்து உருட்டி ஊடே குழிசெய்து நெய்யூற்றித் திரிப்போட்டு விளக்காக அதனை ஏற்றி வீட்டில் இருந்து

கொணர்ந்து தேங்காய் - பழம் உடைத்து வழிபடுதலாகும். அந்த மாவை அம்மன் பிரசாதமாகக் கோவிலருகே இருப்பவர்களுக்குக் கொடுத்துத் தாங்களும் உண்கின்றனர் ஏலமும் சுக்கும் கலந்து கிராம்பும் சேர்க்கப் பெற்று இனிப்பூட்டப்பெற்ற மா மிகச் சுவையாக இருக்கும். தேனும் தினைமாவும் அக்காலத்து மக்களது உணவுப் பொருள். அன்றுடம் மக்கள் பயன்படுத்தும் அரிசியையும் விரும்பி உண்ணும் இறைச்சியையும் தெய்வத்திற்குப் படையலாக்கியதைப் போன்றே மாவின் மீதும் விளக்கேற்றித்தெய்வத்திற்குப் படையலாக்குகின்றனர். தாங்கள் உண்ணும் உணவு நாளும் முட்டுப்பாடின்றிக் கிடைக்க அவ்வுணவுப் பொருளைத் தந்த தெய்வத்திற்கு நன்றிக்கடனாக ஆண்டிற்கு ஒருநாள் படையலாக்குகின்றனர்.

அன்று இரவில் ஆட்டக்கரகமோ. பாட்டுக் கச்சேரியோ அல்லது நாடகமோ நடைபெறுகின்றது. அபூர்வமாக ஓரிரு கிராமங்களில் தற்காலத்தில் வேகமாக விளம்பரமாகிவரும் பட்டிமன்றத்தையோ வழக்காடு மன்றத்தையோ நடத்துகின்றனர். இந் நிகழ்ச்சிகளுக்கு மதுரைவந்து தகுந்தவர்களை ஏற்பாடுசெய்து அழைத்துச் செல்லுகின்றனர். இத்தோடு மூன்றுநாட்கள் விழா முடிவடைகின்றது.

இம் மூன்றுநாள் விழாக்களிலும் கலந்து கொள்பவர்கள் உடலாலும் உள்ளத்தாலும் தூய்மையாக இருக்க வேண்டும். இந்த நியதியை மீறினல் தனிப்பட்ட முறையிலோ அல்லது அந்த ஊர் முழுவதற்குமோ ஏதாவது கேடுநேரும் என்று பாமரமக்கள் அஞ்சுகின்றனர். மாதவிடாய், பிள்ளைப்பேறு போன்றதீட்டுக்காலங்களில் பெண்கள் கோவில் விழாக்களில் கலந்து கொள்வதில்லை.

விழாமுடிந்ததற்கு மறுநாள் உறவன்முறைக்காரர்கள் மீது மஞ்சள் தண்ணிரை ஊற்றி விளையாடுகின்ருர்கள். இதற்கு மஞ்சள் தண்ணிர் ஊற்றுதல் எனப்பெயர். அரைத்தமஞ்சளோடு சுண்ணும்பைக் கலந்து அளவோடு நீர் ஊற்றினல் அந்நீர் செந்நிராக மாறிவிடுகிறது. இத்தோடு பாக்கு, பச்சை வாழைமட்டைச்சாறு போன்ற கறைப் பொருள்களையும் சிலர்சேர்த்துக் கொள்வதுண்டு மாமன் மைத்துனர்களும் மதினியர்களும் கொழுந்தியரும் இவ்விளையாட்டில் கலந்து கொள்வதுண்டு, இவ்விளையாட்டு மாட்டுக்கு வைக்கும் ஊறல்காடித் தண்ணீர் வரை சென்று கலகத்தில் முடிதலும் உண்டு. அன்றைய

மதியத்தோடு இவ் விளையாட்டுக்களை முடித்துக் கொள்ளவேண்டும் என்பதுவும் ஊர்ப்பொதுவிதி,

அன்றுமாலையில் வரவுசெலவுக் கணக்குப் பார்ப்பதற்காகக் கோவிலின் முன்ஊர்க்கூட்டம் நடைபெறுகிறது. வரவாகிய வரிப்பணம் இவ்வளவு, விழாச் செலவு இவ்வளவுஎன்று பொதுப்படுத்தப்பெறுகிறது. அவசியமற்ற அல்லது ஒருவரது சுயநலம் கருதிய செலவு போன்று தோன்றினல் அனைவராலும் அச்செலவு கண்டிக்கப்படுகிறது. செலவு போகப் பணம் மிஞ்சினல் அப்பணத்தைச் ஊர்ப்பொது நலனுக்காகச் செலவிடுகின்றனர். கோவிலை நன்முறையில் எடுத்துக் கட்டுதலும் ஊர்ப் பொதுக்கிணற்றைச் சுத்தப் படுத்தலும் ஆழப்படுத்தலும் இச்சமுதாய நலனில் அடங்குகின்றன. பொதுச் செலவுகள் போகப் பணம் மீதி இருந்தால் ஊர்ப்பொதுப் பெரியவரிடம் பொதுக்கட்டப் படுகிறது. இத்தோடு கொடித்தடைக் கயிறுகள் பிரிக்கப் படுகின்றன. கொடி ஏற்றி இருப்பின் இறக்கப் படுகிறது மறுநாள் பந்தல் பிரிக்கப்பட்டு அந்த இடம் வெறிச்சோடிக் கிடக்கிறது.

விழா நன்மைகள்

1) கிராமத்துப் பொதுக் கோவில் பொங்கல் விழாக்கள் எல்லாச் சாதிகளையும் இணைக்கின்றன. விழாவைச் சிறப்பாக நடத்துவதில் ஒவ்வொரு சாதிக்கும் குறிப்பிட்டதொரு கடமையும் பொறுப்பும் உண்டு. இதற்கு அனைத்துப் பிரிவினரின் ஒருமைப்பாடு தேவைப்படுகிறது

2) பிரிந்திருக்கும் குடும்பத்தார், கணவன் - மனைவி அல்லது மாமியர் - மருமகள் மீண்டும் கூடுவதற்கொரு வாய்ப்பை இவ்வகை விழாக்கள் நல்குகின்றன. தனிப்பட்டவரின் மகிழ்ச்சி, குடும்பத்தில் களிப்பு, சமுதாயக்குதூகலம் இவைதான் திருவிழாக்களின் குறிக் கோள்கள். விழா முடியும் வரை மக்கள் வயிருர உண்டு மகிழ்கின்றனர். … … … இவ்வட்டாரத்துக் காளியம்மன் கோவில்களில் முளைப்பாரி கொட்டுதல், பாற்குடம் எடுத்தல், தீமிதித்தல் ஆகிய நிகழ்ச்சிகள் பெரும்பாலும் நடத்தப்பெறுவது இல்லை எனலாம் … … … … … …

(தொடரும்)

தொல்காப்பியரின் பலர்பால் விகுதி 'ப'

ச. சுபாஸ் சந்திரபோஸ்

தமிழ் மற்றும் இந்திய மொழிப்புலம், மதுரைப் பல்கலைக் கழகம்.

தொல்காப்பியர் கிளவியாக்கத்தில் (தொல் சொல்.7)[1]. ஒரு நூற்பாவிலும் வினையியலில் (தொல். சொல். 203, 204) இரண்டு நூற்பாக்களிலும் பலர்பால் விகுதிகளைக் குறிப்பிடுகின்றார். அவர் குறிப்பிடும் '-அர், -ஆர், -ப, -மார்' ஆகிய நான்கு விகுதிகளில் '-ப' வை மட்டும் விளக்கும் வகையிலேயே இக்கட்டுரை அமைகின்றது.

தொல்காப்பியத்திற்கு (சொல்லதிகாரம்) உரை எழுதியுள்ள இளம்பூரணர் முதல் எல்லா உரையாசிரியர்களும் தொல்காப்பியரைத் தொடர்ந்து இலக்கணம் வகுத்துள்ள பெரும்பாலான இலக்கண நூல் அசிரியர்களும்'-ப' வை ஒரு பலர்பால் விகுதியாகவே கூறு-கின்றார்கள். உரையாசிரியர்கள் 'உண்ப', 'தின்ப போன்ற வடிவங்-களைச் சான்றுகளாகக் கொடுத்து, இவ்வினைகள் எதிர்காலம் காட்டும் என்பதை ஏற்றுக் கொள்கின்றார்கள்.

இப்'ப'கர விகுதிக்கான சான்றுகள் தொல்காப்பியர் மொழி-யிலும், பழந்தமிழ் இலக்கியங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றன.

தொல்காப்பியர் மொழி:

என்ப- (தொல். சொல். 22:2)

-மொழிப (25:1)

பழந்தமிழ் :

-என்ப (குறுந் 12:4)

-நிற்ப (நாலடி. 316 : 3)

[1]பொதுவாகக் கூறும் இடங்களுக்கும் எடுத்துக்காட்டுகளுக்கும் நூற்பா எண்கள், தொல்காப்பியம் சொல்லதிகாரம், இளம்பூரணர், உரையைத்-தழுவியே கொடுக்கப்படுகின்றன

மேற்காணும் பழந்தமிழ்ச் சான்றுகளுக்குச் சமமான அதேபொருள் தரும் '-ர்' உடன் முடியும் சான்றுகளும் பழந்தமிழில் காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

-என்பர் - (குறுந் 282 8)
-நிற்பர் - (நாலடி. 175:3)

மேற்கூறிய பழந்தமிழ்ச்சான்றுகள் என்ப - என்பர், நிற்ப - நிற்பர் போன்றவை பொருள் நிலையிலும், வடிவ அமைப்பிலும் (மொழி இறுதி -ர் தவிர) ஒன்றே என்பதில் ஐயம் இல்லை இருப்பினும் தொல்காப்பியரின் கொள்கைப்படி 'என்ப' என்பதை என் ப என்றும் 'என்பர்' என்பதை என்-ப்-அர் என்றும் பாகுபாடு செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதால் ஒரே பொருளையும் ஏறக்குறைய ஒரே வடிவ அமைப்பையும் உடைய சொற்களுக்குப் - ப; அர் என இரண்டு பலர்-பால் விகுதிகளை நாம் பெறுகின்றோம்

டாக்டர் எம் இஸ்ரயேல் (1973: 151) '-ப' வுடன் முடியும் பலர்பால் வினை முற்றுக்களைக் கீழ்க் கண்டவாறு பாகுபாடு செய்கின்றார்:

என் - ப் - அ-∅
மொழி - ப் - அ - ∅

அவருடைய கருத்துப்படி '-ப்-' எதிர்காலத்தையும், '-அ-' படர்க்கை-யையும், ∅ பலர்பாலையும் குறிக்கும். இவ்வகையான பகுப்பு விளக்க-முறையில் (Descriptive study) சரியாக அமைந்து காணப்படு-கின்றது.

வரலாற்று நோக்கில் அணுகும்போது தொல்காப்பியர் காலத்திலிருந்து காணப்படும் 'என்ப', 'நிற்ப' போன்ற பலர்பால் வினை முற்றுக்களுக்கு முறையே *என்பர், *நிற்பர் போன்றவற்றையே மூல வடிவங்களாகக் கொள்ள வேண்டும். மூல வடிவங்களாகக் கொள்ளத்-தக்கவை பழந்தமிழில் காணப்படுவதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவ்வாறு கொள்ளும்போது 'என்ப,' 'நிற்ப' போன்ற வடிவங்களின் தோற்றம் பற்றி விளக்க வேண்டும். *என்பர், *நிற்பர் போன்ற மூல வடிவங்களின் இறுதி - ர் இழந்தேமேற்கண்ட '-ப' வுடன் முடியும் வடிவங்கள் தோன்றி இருக்கவேண்டும்,

மொழி இறுதியில் '-ர்' இழப்பது தமிழில் அதிகம் காணப்பட வில்லை என்றாலும் மொழியிடையில் இழந்ததற்கான சான்றுகள் சில பழந்தமிழில் காணப்படுகின்றன:

சாத்திய (பெரும். 347) < *சார்த்திய (பெரும். 121)

கோத்த (அகம். 7 : 18) < *கோர்த்த

ஆனால் மொழி இறுதி '-ர்' இடைகாலத் தமிழ் கல்வெட்டுக்களிலும் தற்காலத் தமிழிலும் சில சொற்களில் இழந்துள்ளதைப் பரவலாகக் காணலாம் தண்ணீ' (<*தண்ணிர்) எனவே-ப என முடியும் சொற்களுக்குப் -பர் என முடிவதே மூலவடிவம கும்.

மொழி இறுதி '-ர்' இழப்பு ஒரு முழுமையான மாற்றமில்லை. இது ஒரு வட்டார வழக்கு போலவே காணப்படுகின்றது. அதுவும் தொல்காப்பியரின் மொழியில் '-ர் இழந்த சொற்கள் பெருகிக் காணப்படுவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சேனாவரையர் (தொல். சொல்7.) ''... பகரவிறுதியிற் சிறுபான்மை வழக்கிற்ருகலின், பின் வைத்தார்'' என்று கூறுவதும் '-ப வுடன் கூடிய வடிவங்கள் வட்டார வழக்கே என்ற கருத்துக்கு அரண் செய்யும் வகையில் உள்ளது.

தொல்காப்பியருக்குப் '-பர், -ப' என முடியும் இரு வகையான பலர்பால் வினை முற்றுக்கள் கிடைத்திருக்கின்றன. '-பர்' முடிவு முற்றுக்களை '-ப்-' அர் எனக் கொண்டு -''அர்' ஐ ஒரு பலர்பால் விகுதியாக அவர் கூறுகின்றார். ஆனால் '-ப' வுடன் முடியும் முற்றுக்களை அவர் 'ப்-அ' எனப்பிரிக்கவில்லை அவ்வாறுகொண்டால்

> ''அ ஆ வ என வரூஉம் இறுதி
> அப்பால் மூன்றே பலவற்றுப் படர்க்கை'' (தொ. சொ. 212)

என்னும் நூற்பாவில் கூறப்படும் '-அ[7]' என்னும் பலவின்பால் விகுதியும் பலர்பால் வினைமுற்றில் காணப்படும் '-(ப்)-அ'வும் ஒன்று போல் ஆகிவிடும். இந்த ஐயத்தைத் தடுக்கப் '-ப எனப் பகுத்தது, மேலும் ஒரு வினாவை எழுப்பும் வகையில் அமைந்து விட்டது. எனவே தொல்காப்பியர் '-ப' வைப் பலர்பால் விகுதியாகக் குறித்தாலும் வரலாற்றுநோக்கினும் காபோது' -ப்' என்னும் எதிர்கால இடைநிலை-யும் -'அர்' என்னும் பலர்பால் விகுதியில் -ர்' 'இழந்த '-அ'வின் கூட்டு-

வடிவம் எனக் கொள்வதே பொருத்தமாகத் தோன்றுகின்றது. தொல்காப்பியர் கால இடைநிலைகளைவிட பால் எண் இடம் காட்டும் விகுதிகளுக்கே முதன்மை கொடுத்தார் என்பதைச் சில (தொல். சொல் 199,200) நூற்பாக்களில் அவர் கால இடைநிலைகளுடன் எண்-இடம் காட்டும் விகுதிகளையும் சேர்த்துக் கூறி இருப்பதில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

தொல்காப்பியர் '-ப' என்பது பலர்பால் விகுதி எனக் கொண்டிருந்தாலும் பழந்தமிழில் பல இடங்களில் பலர்பாலையும் ஒருசில இடங்களில் பலவின்பாலேயும் குறிக்கின்றது. சான்றாக 'அறிப' என்னும் முற்றுச்சொல் இரண்டுபாலையும் குறிக்கின்றது.

பலர்பால்:

என்றேரும் அறிப (நற். 226:9)

பலவின்பால்:

கினியுந்தாம் அறிப (நற்.290:6)

'அறிப' பலர்பால் வினைமுற்றாக இருப்பின் அதற்கு மூல வடிவம் *அறிபர் என்பதையே கொள்ள வேண்டும். முன்னைய வடிவம் 'ர் இழந்த ஒரு வட்டார வழக்குச் சொல்லாக இருக்க வேண்டும். அறிப' பலவின்பால் வினைமுற்றாக இருப்பின் 'அறி-ப்-அ' என் பகுத்து முறையே பகுதி. கால இடை நிலை, பலவின்பால் விகுதி எனக் கொள்ள வேண்டும். 'அறிப' என்னும் பலர்பால் வினை முற்று பலவின்பால் குறித்தது எனக்கொள்ள வேண்டியதில்லை.

மேலும் ஆகுப (புறம் 7:10), ஆகுவ (குறுந்.104:5) என்ற இரண்டும் பலவின்பால் வினைமுற்றுக்களாகவே காணப்படுகின்றன. 'ஆகுப'வுக்கு அறிப' என்றும் பலவின்பால் வினை முற்றுக்குக் கொடுத்த விளக்கமே பொருந்திவரும் பின்னதைத் தொல்காப்பியரின் கருத்துப்படி 'ஆகு-வ' எனப் பகுக்க வேண்டும். ஆகு-பகுதி என்றும் '-வ' பலவின் பால் விகுதி என்றும் கொள்ள வேண்டும். ஆனால் 'ஆகுவ' என்னும் முற்றுக்கு முன்னைய வடிவமாக *ஆகுப என்பதையே கொள்ள வேண்டும். இரண்டு உயிர்களுக்கு இடையில் வரும் '-ப்'-, '-வ்' ஆகத்

திரியதிராவிட மொழிகளில் வாய்ப்புண்டு. அம்முறையில் 'ஆகுப்'வில் உள்ள -ப்' '-வ்' ஆகித் தோன்றிய வடிவமே 'ஆகுவ'. பின்னர் '-ப'- வுடனும் '-வ'வுடனும் முடியும் முற்றுக்கள் முறையே பலர்பால், பலவின் பால் வினைமுற்றுக் களாகக் கொள்ளப்பட்டுள்ளன 'ஆகுவ'வை 'ஆகு-வ்-அ' எனக் கொண்டு முறையே பகுதி, காலஇடைநிலை, பலவின்பால் விகுதி எனக் கொள்ளவேண்டும்.

பல நூற்றாண்டுகளுக்கு முன் அறிவியல் நெறிகள் அதிகம் வளர்ச்சியடையாத காலத்தில்இயற்றப்பட்ட தொல்காப்பியம், இலக்கண அறிஞர்களும், மொழியியல் வல்லுநர்களும் வியக்கும் வகையில் பல நெறிமுறைகளைக் கொண்டுள்ளது. மேலும் அதனை ஆய்ந்து இலக்கணம் கற்றோரால் கூறப்படும் கருத்துக்கள் அதற்கு அரண் செய்யும் வகையிலேயே உள்ளன. மேலே கூறிய கருத்துக்களும் தொல்காப்பியர் கூறியுள்ள '—ப' என்னும் பலர்பால் விகுதியைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள உதவும் எனலாம்

பயன்பட்ட நூல்கள்

1. Israel, M., 1973, The Treatment of Morphology in Tolkappiyam, Madurai Kamaraj University, Madurai.

2. இசரயேல், மோ., 1976, இலக்கணம் ஆய்வு — வினைச்சொல், சிந்தாமணி வெளியீடு, மதுரை.

இலக்கியத்தில் இமயமலை

கு. சதாசிவன், M.A., M.Phil

மதுரைப் பல்கலைக்கழகம்

சென்ற இதழ் தொடர்ச்சி

புராணக் கதைகள்: எந்நாட்டுக்கும் கற்பனைக் கதைகளும் புராணக் கதைகளுமுண்டு. புராணக் கதைகள் பெரும்பாலும் எந் நாட்டைப் பற்றியனவோ, அந்நாட்டு மக்களின் உளநிலைக்கு ஏற்றாற்போல் அமைவதுண்டு. இந்தியாவில் வழக்கிலிருக்கும் புராணக் கதைகள் இந்தியருக்கே உரிய தன்மையில் அமைந்தவை. இவை இந்திய மக்களின் உள நிலைக்கும் நம்பிக்கைக்கும் ஏற்றாற்போல் தீட்டப்பட்டுள்ளன இப்புராணக் கதைகளில் வரும் பெரும்பான்மை நிகழ்ச்சிகள் வரலாற்றுண்மைக்குப் புறம்பானதாகவே இருக்கின்றன. ஆயினும் அவற்றைப் படிப்போருக்கு அவை உவகை தருவன அறிவியல் நோக்குடன் சிந்திக்கும் மக்களுக்குப் பொருத்தமில்லா விடினும், கட்டுக் கதைகள் மீண்டும் மீண்டும் பக்குவப்படா உள்ளங்களை ஈர்க்கின்றன. இப்புராணக் கதைகளில் அதிக நம்பிக்கையும், நாட்டமும் இருப்பதனால் இந்தியாவில் தெய்வ நம்பிக்கையும், பக்தியும் பெருகுகின்றன. இந்நிலை, வரலாற்றுக்குப் புறம்பான, மனிதனுக்கு எட்டாத சில சக்திகளுக்குத் தங்கள் வாழ்வில் சிறப்பு முக்கியத்துவம் தந்தமையால் ஏற்பட்டதே. பழங்கால முதற்கொண்டு தமிழர் தெய்வ நம்பிக்கையுடையோராகையால், இப்புராணக் கதைகளுக்கு அவர்களிடத்து அதிக பிடிப்பு இருந்தது. அவர்களுடைய கற்பனையில் ஊறிய இக்கதைகளுக்கு வரம்பிலாக் காரணத்தால், அவற்றைத் தம் நூற்களில் புகுத்தவும் துணிந்தனர் அவை எங்கிருந்து வந்தன. எவ்வாறு வந்தன, எப்போது வந்தன என்று அவர்கள் பார்த்திலர். எனவேதான் சில புலவர்களின் பல பாக்கள் வெறும் கட்டுக்கதைகளின் தொகுப்பாயுள்ளன. இப்பகுதியில் இமயமலை பற்றிய அப் புராணக் கதைகள் தமிழகத்தில் நிலவி வந்தமை பற்றிச் சற்று ஆய்வோம்.

வடக்கே இமய மலையும். தெற்கே பொதியில் மலையும் முறையே வட-தென் துருவங்களாக இயங்குவதால் நிலை பெற்றது இவ்வுலகு என்று கருதி வந்தனர் நம்முன்னோர். இக்கோட்பாட்டைப் புறநானூற்றுப் பாடல் இனிமை ததும்ப சித்திரிக்கின்றது. அப்பாடற் பகுதி:

"வடதிசை யதுவே வான்றோ யிமயம்
தென்றிசை யாஅய்குடி யின்றாயிற் .."

இவ்வடிகளுக்குக் கீழ்க்கண்டவாறு உரையெழுதினார் உரையாசிரியர்: "...வடதிசைக் கண்ணதாகிய வானைப் பொருந்தும் இமயமலையும் தென்றிசைக் கண் ஆய்குடியும் இல்லையாயின் இந்தப் பரந்த இடத்தை-யுடைய உலகம் கீழ் மேலதாகிக் கெடும் அன்றி வடதிசை தேவருல-கோடு ஒத்தலான், இமயத்தால் தாங்க வேண்டுவதில்லை; தென்றி-சைக்கண் ஆய்குடி தாங்கிற்றில்லையாயின், இவ்வுலகு பிறழும்;....., இமயமலை இறைவன், இறைவி ஆகிய முதல்வர்களின் உறைவிட-மாகவும் தேவருலகாகவும் இருந்தமையால் அத்துருவம் நிலை பெற்றது. அவர்களின் பளுவால் வடதிசை தாழ்ந்துபோக, தென்றிசை மேலெழுந்தது இதனால் உலகுக்கு நடுக்கம் ஏற்பட்டது. இந் நிலை-யாமையை யுணர்த்த தேவர்கள் இறைவனிடம் முறையிட. இறைவன் குடமுனியை தென்றிசை நோக்கியனுப்பினார் இமயத்திலிருந்து புறப்பட்ட அகத்தியர், தென் கோடியடைந்ததும், உலகம் சமநிலை பெற்றது. உலகத்தைச் சமநிலைப் படுத்திய அகத்தியர் உறைந்தது பொதியில்மலை. ஆகவேதான் அம்மலைக்கு அவ்வளவு சிறப்பு. இது புராணம் கூறும் செய்தி

இவ்வளவு சிறப்புடைய மலையிற்றான் முழுமுதற் கடவுள் சிவபெருமான் உறைந்துள்ளான் என்பது ஐதீகம். இக்கருத்தினை 'இறைகொண்டிருந்தன்ன நல்லாரை', 'தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக' என்ற இரு கலித் தொகைச் சொற்றொடர்கள் விளக்கும். தமிழ் இலக்கியங்கள் இக்கடவுளுக்குச் சூட்டாத பெயர்-களில்லை; புகழ்மாலைகளில்லை; பாடாத பாக்களுமில்லை. இக்-'கடவுள் 'ஆறறி அந்தணன்', 'வடபால் முனிவன்' 'இமவில்வி' முதியவன்', 'வேத முதல்வன்', 'பிறைக் கண்ணியண்ணலார்', கொற்றவனார்', 'துன்னுசடைச் சங்கரனார்', 'ஆதியந்தணன்',

பாகமுண்ட பைங்கட் பார்ப்பான்', 'அம்மையப்பன்', 'இமயவன்'. 'ஆனந்தக் கூத்தன்', 'பாரதி', 'திரிபுரமெரித்த விரிசடைக் க வுள் 'செஞ்சடைக் கடவுள்', 'முக்கணன்', 'நெற்றிக்கணன்'. 'செங்கணன்'' 'காளை ஊர்தியன்'. 'திருநீலகண்டன்', 'நஞ்சுண்டான்', 'புலித்தோலை அரக்கிசைத்தான்' போன்ற சிறப்புப் பெயர்களால் அறியப்படுகிறான் கையில் உடுக்கையும் பாம்பும். கழுத்தில் சுற்றிய பாம்பும், இடையில் அணிந்த புலித்தோலும். கையில் திரிசூலமும் தாங்கிய அவனுடைய காட்சியைப் புகழாதாரிலர். 'இம் மாதொரு பாகனாரின் துணை வியார் 'பார்வதி'. பகவதி'. 'இமயவதி ,'இமயவல்லி', மலைமகள் 'குறத்தி', 'இமாசலை , 'உமையவள் , 'மலையர்தம் மகளார்' போன்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டாள். இமயமலையிற்றோன்றிய தாகலின் அவள் பெயர் 'மலைமகள்' என்றாயிற்று

இவ்வானந்தக் கூத்தன் ஆடும் மேடை கைலாயம். இம்மலையை ஒலிதருகயிலை', 'கோலவரைக் கயிலை', 'ஆடகமாமலை', என் றெல்லாம் திருவாசகம் புகழ்ந்து பாடிற்று. திருவாசகத்தில் வ ம் ஒரு வாசகம்:

"... ... ...
கலைத் தலை யாய்கரு ணாகர
னேகயி லாய மென்னும்
மலைத்தலை வாமலை யாண்மண
வாளவென் வாழ் முதலே"

என்றும், திருவாசகத்தின் போற்றித் திரு அகவல் "மானக் கயிலை மலையாய் போற்றி" என்றும் கூறும். 'கயிலை நன்மலையிறை மகனை நின் மதிநுதல்' என்று பாடிற்று சிலம்பு.

"ஆனந்தக் கூத்தன் சொற்போந்து வளப்பில்
கயிலை வழியில் வந்தேனே"

என்று திருமந்திரமும், "கொற்றவனார் திருக்கயிலைமலை" "அண்ணலார் கயிலை" என்று பெரிய புராணமும் புகழ்ந்து பாடின. 'மயிலாடு இமயம்' என்று பெருங்கதை கூறிற்று. சிலப்பதிகாரத்தில் வரும் 'ஊர்க்கோட்டம்' என்ற சொல்லுக்கு 'இறைவனூராகிய கைலாயம் நிற்குங் கோயில்' என்று உரையாசிரியர் பொருள் தந்தார்.

இம்மலை மேடையிற்றான் அவன் கொடு கொட்டி பாண்டரங்கம். கபாலம் என்ற கூத்து வகைகளை ஆடினான். அவ்வமயம் மலைமகள் கொண்டசீர் வளர்நாக்கு முற்பாணி ஆகிய மூவகைத் தாளங்களை முறையாகத் தந்தாள். தேவர்களுக்காக அவன் அசுரர்களின் 'திரிபுரந்தீ மடுத்தான்'. இச்சிறப்பினைக் கொண்டே இறையனார் அகப்பொருள் உரை அவனைத் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள் என்றது இச்செய்தியை விளக்கும் சிலம்புப் பாடல்:

"திரிபுரமெரியத் தேவர் வேண்ட
எரிமுகப் பேரம் பேவல் கேட்ப '-என்பது ஆம்.

ஆனால் 'இந்திரபுரம்' யாதென்று விளங்கவில்லை. இவ்விறைவன் தன் தலைமேல் பிறைச்சந்திரனைச் சுமந்து, உலகின்கண் பரவிவரும் இருளையகற்றி ஒளியைத் தந்தான். தெளிந்த நீருடைய கங்கையின் கொடிய வேகத்தை ஒடுக்குவதற்காக. தம் சடையிலே அதனை ஏற்றி அடக்கிக் கொண்டான். இவையனைத்தும் கொண்ட கலித்தொகைப் பாடல்,

"ஆறறி அந்தணர்க்கு, அருமுறை பல பகர்ந்து,
தேறுநீர் சடைக்கரந்து, திரிபுரந் தீமடுத்து,
கூருமற் குறித்ததன்மேற் செல்லும், கருங்கூளி;
மாருப்போர் மணிமிடற்று எண்கையாய்!"

என்று வாழ்த்திற்று.

இம்மலைக்கண் மாமுனிவரும், அந்தணரும். அடியவரும் தவம் மேற்கொண்டனர். இறைவனின் அன்பைப் பெற ஆகவனீயம், காருகபத்தியம், தென்றிசையங்கி என்ற முத்திரைகளை வளர்த்துப் பலிசெய்தனர். இச்செய்திகளைப் பின்வரும் புறநானுற்றுப் பாடல் அடிகளும், சிலப்பதிகார அடிகளும் முறையே விளக்குவன.

"அந்தி யந்தண ரருங்கட னிறுக்கும்
முத்தீ விளக்கிற் றுஞ்சும்" (புறம்)

'இமயத்தாபதர்', 'அருமறையந்தணர் ஆங்குளர்" (சிலம்பு)

''வடதிசை மருங்கின் மறைகாத் தோம்புநர்
தடவுத்தீ யவியாத் தண்பெரு வாழ்க்கை'' (சிலம்பு)

நான்மறைகளை முற்றுமுணர்ந்த மாமுனிவர்கள் வடக்கிருந்து தென்னாடு அடைந்தனர் என்றும் நம் இலக்கியங்கள் அறிவிக்கின்றன. பெரும்புகழ் பெற்ற அகத்தியரும் அவ்விதம் வந்தவருள் ஒருவர் என்று கருதப்படுகிறது. சேரன் செங்குட்டுவனின் அவையடைந்து, 'வடநாட்டரசர் உன்னைப் பழித்திலர்' என்று கூறிய மறையவரும், பிறிதொருவர் தென்னகத்திலிருந்து திருமூலர் வடமலைக்குச் சென்று, ஆனந்தக் கூத்தனைக் கண்டு வணங்கி, அக்கூத்தன் கூற்றுப்படி பொதியில் மலைக்கு வந்தார் என்றும் திருமூலர் வரலாறு கூறும்.

பாலாழி கடைந்து அமுது எடுத்தபோது மகாவிஷ்ணு மத்தாகப் பயன்படுத்தியது மந்தாரமலை என்ற செய்தியைப் பிறிதொரு புராணக் கதை கூறுகிறது இச் செய்தியை விளக்கும் சிலப்பதிகார அடிகள் வருமாறு:

''வட வரையை மத்தாக்கி, வாசுகியை நாணாக்கிக்
கடல் வண்ணன் ரண்டொரு நாள்
கடல் வயிறு கலக்கினையே''

சீவகசிந்தாமணி (963)யிலும் இக்கதை இடம் பெற்றுள்ளது. இக்கதை வைணவ சமயத்தார்க்கு அமுது போன்றது. வாசுகி என்ற பாம்பு உமிழ்ந்த நச்சைச் சிவன் கையில் கொண்டு, உலகழியாமல் பாதுகாக்கத் தாமே உண்டுவிட்டார். இது கண்டு பீதியடைந்த பார்வதி சிவன் கழுத்தில் கைவைத்து, அந்த நச்சு கீழிறங்கா வண்ணம் தடுத்தாள். அந் நச்சு அப்படியே கழுத்தில் உறைந்து விட்டது. எனவே அவ்விறைவன் 'நஞ்சுண்டான்' என்றும் 'நீலகண்டன்' என்றும் அறியப்பட்டார். சிவபெருமான் அசுரருடன் போராடிய காலத்து, மேரு மலையைத் தம் வில்லாகப் பயன்படுத்திய கதையும் சங்க இலக்கியங்களாகிய பரிபாடலிலும். கலித் தொகையிலும் பரக்கக் காணலாம். அதனை 'இமயவில் வாங்கிய ஈர்ஞ்சடையந்தணன்' (கலித்தொகை) என்றும், நாகம் நாண, மலை வில்லாக மூவகை ஆரெயில் ஓரழல் அம்பின்முளிய' என்று பரிபாடலும் பாடின. திருமாலைப் பற்றிய பரிபாடல் திரட்டுப் பகுதியிலும் இக்கதை கூறப்பட்டுள்ளது

இலங்கை மாமன்னன் இராவணன் சிவனிடத்து அன்பும் பக்தி-யும் கொண்டு வரம் பல பெற்றவன் தன்னுடைய இசைத் திறத்தால் சிவனுள்ளத்தையே உருக வைத்தவன். வரம் பல பெற்ற அம்மன்னன் தன் செருக்கால் இமயமலையைத் தூக்க முற்பட்டான். சிறிது மேலே தூக்கினான்; ஆனால் முழுதும் மேலே தூக்க இயலாமல் அவதிப்-பட்டான் தோல்வியைத் தழுவிய அவன், பின் தம் செருக்கையும் இழந்தான். இச் செயல், மதத்தாலும் பேராற்றலாலும் முன் உந்தப்-பட்ட ஒரு யானை தன் தந்தக்கொம்புகளை அருகிலுள்ள வேங்கை மரத்தில் குத்திப் பின் எடுக்க இயலாமல் தவித்த நிலைக்கு ஒப்பிடப் பட்டுள்ளது. இக்காட்சியை குறிஞ்சிக்கலிப்பாடல் தெள்ளத் தெளிய விளக்கும் அவ்வடிகள்,

''ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப் பொலி தடக்கையிற் கீழ்புகுத் தம்மலை'' என்பதாம்

முழுமுதற்கடவுளின் சீடன்; இசை வல்லான்; ஆற்றல் மிக்கோன். வரம் பல பெற்றோன் ஆகிய இராவணனைத் தமிழ் இலக்கியம் 'அரக்கர் கோமான்' என்று இகழ்ந்து கூறிற்று. இக்கருத்து ஒரு-வேளை இராமாயணத்திலிருந்து பெற்றதாக இருக்கலாம் அது-போன்று இராவணன் 'ஐயிரு தலையின் அரக்கன் என்றும் கூறப்-பட்டுள்ளான் இவனுக்கு ஐயிரு தலைகள் இருந்தனவா? என்பது ஐயப்பாட்டிற்குரியது. ஆனாலிவன் ஐயிரு = பத்து ஆட்களுடைய ஆற்றலைப்பெற்றிருந்தான் என்பது பெரும்பாலும் பொருந்துவது காண்க.

அது போன்று தேவலோகத்தில் வாழும் நாட்டிய மாதராகிய ஊர்வசி, மேனகா, ரம்பா, திலோத்தமை போன்றாரின் செய்திகளும் இலக்கியங்களில் பரக்கக் காண்கிறோம். இப் பெண்மணிகள் தேவருலக தேவரடியார்கள் என்றும் தேவலோக மகளிர் என்றும் அழைக்கப்-படுவர். இவர்களில் ஒருத்தியின் பூலோகப் பிறப்பே மாதவி என்ற நாட்டியமாது என்று சிலம்பும், மேகலையும் கூறும் இவர்கள் தேவருலகாகிய இமயமலைக் கண்ணகத்தேயுள்ள கோடுகளில் ஆடிப் பாடி மகிழ்ந்தனர். தேவருக்கு விருப்பந்தரும் இம்மகளிர் அன்னச் சேய் (குஞ்சு)களுடன் பாடியாடி, காலம் கழித்தனர் என்று நற்றிணைப் பாடல் விளம்புகின்றது.

''நிலந்தாழ் மருங்கின் தென்கடல் மேய்ந்த
விலங்கு மென் தூவிச் செங்கால் அன்னம்
பொன்படு நெடுங்கோட்டு இமயத்து உச்சி

வானர மகளிர்க்கு மேவல் ஆகும்
வளராப் பார்ப்பிற்கு அல்கிரை ஒப்பும்
... ..."

இத் தேவருலக அடியார்களைப் பின்பற்றியே. பிற்காலத்து இந்தியக் கோயில்களில் தேவரடியார்களை நியமிக்கும் விந்தை ஏற்பட்டது என்று தோன்றுகின்றது. இத் தேவருலகப் பெண்மணிகள். தேவரவையில் ஆடிப் பாடினது போல். பூவுலகக் கோயில் தாசிகளும் ஆடிப்பாடினர் என்க.

இத்தேவருலகில் உறைந்து வரும் மேலோரைப் பற்றிப் பரிபாடல் சிறப்புக் காட்சியொன்று தருகின்றது திருவுக்கெல்லாம் உடையவளாகிய திருமகளும், கருடவாகனக் கொடியுடையோனாகிய விஷ்ணுவும் (திருமால்). இடப ஊர்தியனாகிய சிவனும், தாமரையில் வீற்றிருப்போனுமாகிய நான்முகனும் (பிரம்மன்), ஆதித்தர் பன்னிருவரும். தேவ மருத்துவர்களிருவரும், நூலறிவோராகிய வசுக்கள் எண்மரும், பதினொரு உருத்திரரும், திசைக்காப்போர் எண்மரும் (இந்திரன், நிருதி. இயமன், அக்கினி, வருணன். வாயு, குபேரன, ஈசான்), மற்றுமுள்ள தேவர்கள் யாவரும், இவரொழிந்த அமரரும், அவுணரும். மற்றையோரும், வேதறிவு தவமுதல்வரீ எழுவரும், ஏனையோரும் இம் மலைக்கண் வாழ்ந்து வரலாயினர். இதனைக் குறிக்கும் பரிபாடல் செய்யுள்:

'மண்மிசை அவிழ்துழாய் மலர்தரு செல்வத்துப்
புண்மிசைக் கொடியோனும் புங்கவம் ஊர்வோனும்
மலர்மிசை முதல்வனும் மற்றவனிடைத் தோன்றி
உலகிருள் அகற்றிய பதின்மரும் இருவரும்
மருள்துரை இருவரும் திருந்து நூல் எண்மரும்
ஆதிரை முதலவனிற் கிளந்த
தாதர் பன்னொருவரும் நன்திசை காப்போரும்
யாவரும் பிறரும் அமரரும் அவுணரும்
மேவரு முதுமொழி விழுத்தவ முதல்வரும்
பற்ருகின்று நின் காரணமாகப்
பரங்குன்று இமயக் குன்றம் நிகர்க்கும்;
... ..."

தேவனும், தேவரும், தேவியரும், முனிவரும், அந்தணரும், ஆடல் நங்கையரும் கொண்டதே இமயமலை. என்னே இம்மலையின் சிறப்பு

இமயம் முதல் குமரி வரை மக்கள் மனத்துஆழப்பதிந்த பிறி-தொரு புராணக் கதை அகத்தியரைப் பற்றியது இக் கதை அகத்-தியருடைய அறிவையும் ஆற்றலையும் சித்திரிக்க வல்லது. எட்வர்ட் பால்பர் Encyclopaedia Asiatica (vol I, p 40) என்ற நூலில் அகத்தியர் திபெத்தில் பிறந்தவர் என்று கூறுகிறார் இந்திய புராணக் கதைகள் அவரை இமய மலையுடன் வைத்து எண்ணுகின்-றன. உலகைச் சமன் செய்தல் வேண்டி இறைவன் அவரைத் தென்னகம் நோக்கியனுப்பினார் என்று கூறுகின்றன இப்புராணங்-கள். தென்னகம் புகவிருக்கும் அகத்தியருக்குத் தமிழ் மொழியையும் இதர தத்துவங்களையும் இறைவனே புகட்டியதாக அறியப்படுகிறது. இமயத்திலிருந்து வரும் வழியில் அவர் உயர்ந்து வளர்ந்திருந்த விந்திய மலையைக் கண்டு கொண்டார். தம் ஆற்றலால் விந்திய மலையையும் கடந்து, தென்னகம் நுழைந்து, பொதியில் மலையில் தம் உறைவிடத்தை அமைத்துக் கொண்டார் இச் செய்தியை தள-வாய்புரச் செப்பேட்டின் வட மொழிப்பகுதி கீழ்வருமாறு கூறுகின்-றது. ''தன் உடலால் மூவுலகின் வாயிலை (ஆகாயத்தை) அடைக்-கின்ற விந்திய மலையைத் தன்முன் பாதங்களை வைத்து ஒரே இடத்தில் நிலைத்திருக்கும் மலையாகச் செய்தவரும், தேவேந்திரனை (நகுஷனை) ஊர்ந்து செல்லும் பிராணியாக (பாம்பாக)ச் செய்தவரும், கடலை நீர்த்துளியாகச் செய்தவரும், முனிவர் கூட்டத்தின் தலைவரு-மான குடமுனி (அகத்தியர்) எந்தக் குலத்திற்குப் புரோகிதரோ என்று அவருடைய வீரதீரச் செயல்களைச் சொல்லிற்று.

இமய மலைக்கண் வாழ்ந்த ஏழு மாமுனிவர்களில் தலையாய முனிவராகத் திகழ்ந்தார் அகத்தியர். இன்று அவர் அகத்திய மலை என்றும் குற்றாலமலை என்றும் போற்றப்படும் பொதியில் மலையில் வாழ்ந்து வந்ததாக கருதப்படுகிறது. எனவே இம்மலை 'தெய்வ மால்வரை' ஆயிற்று. இவ் வகத்தியனோ சினத்தை அறவே அடக்கிய-வன்; பெரும் தவ வலிமையுடையவன். ''பின்னிலை முனியாப் பெருந்தவன்'' என்று சிறக்க மணிமேகலை பாடிற்று. முதல் பாண்டிய மன்னனை முடி சூட்டியவனும் அவனே என்றன வேள்விக்குடிச் செப்-பேடுகள். அவனோ அறிவின் மேதை; கலையின் காவலன். தமிழகத்தில் மொழியையும், அறிவையும் புகுத்தியவன். முதலிரு சங்க

மிருந்து தமிழ் ஆய்ந்தவன். இச் செய்தியை இறையனார் அகப்பொருள் உரையும், பிற நூற்களும் கூறின செய்யுள் வடிவில் அமைந்த அவனுடைய பாடல்கள் மொத்தம் 19,647 என்பர் அறிஞர். இவை புராதன வரலாறு, சமயம், இறையியல், மந்திரம், தந்திரம் பாவத் துடைப்பு மருத்துவம், நோய், தொழுநோய், தாவரயியல், மூலிகை மருந்து, வேதியல். மருந்து தயார் செய்தல், ஆகியவற்றைக் கொண்டவை. இவை அனைத்தும் முதல் அகத்தியரால் இயற்றப்பட்டவையா என்றால் இல்லை. அகத்தியர் என்ற பெயரைக் கொண்ட அறிஞர் பலர் வாழ்ந்துள்ளனர். இராமசாமிப் புலவர் தொகுத்த சிறப்புப் பெயர் அகராதி ஏறத்தாழ நாற்பதுக்கும் கூடுதலான அகத்தியர் பெயர்களைத் தருகின்றது ஐரோப்பியர் வருகைக்குப் பின்னும் அகத்தியர் வாழ்ந்து வந்தனர் என்று முற்கூறிய ஆங்கில நூல் அறிவிக்கின்றது இந்நூல், கி. மு. 500-ஆம் ஆண்டையொட்டி முதன் முதல் பிராமணக் குடியேற்றங்களைத் தென்னகத்தில் அவர் அமைத்தார் என்றும் கூறுகின்றது.

அகத்தியருக்கும் இராவணனுக்கும் ஒருபோழ்து நடந்த இசைப்போட்டியில் முன்னவர் பின்னவரை வெற்றி கொண்டார் என்று மதுரைக்காஞ்சியின் விளக்கமற்ற ஒரு பகுதி கூறுகின்றது. மற்றொரு புராணக்கதை முதிய மறையையுண்டாக்கிய பிரமன் பின்னோனாகிய குறுமுனி என்று கூறுகிறது இடைக்காலத்தைச் சேர்ந்த சிறிய, பெரிய சின்னமனூர்ச் செப்பேடுகள் அகத்தியனை பாண்டியரின் குடும்ப புரோகிதராகக் கூறுகின்றன. வீரசோழியத்தால் வரும் பௌத்தக் கதையொன்று அவர் அவலோகிதேச்சுரரிடம் தமிழ் கற்றார் என்றும், சைவக் கதையொன்று சிவனிடம் தமிழ் கற்றார் என்றும், பிறிதொரு கதை முருகனிடம் தமிழ் கற்றார் என்றும் உரைக்கின்றன. வாழ்வின் இறுதிக் காலங்களில் அவர் பொதியில் மலையில் தங்கியிருந்தார் என்றும் அறிகிறோம்.

அகத்தியரைப் பற்றிய இச் செய்திகள் யாவும் கட்டுக்கதைகளே என்று கருதப்படுகிறது இவற்றில் கதைகளைத் தவிர வரலாற்றுண்மை இருப்பதாகத் தோன்றவில்லை. இலக்குவனார் அகத்தியரை ,'வெறும் கட்டுக் கதையின் விளைவே'' என்று சாடினார். அதற்கு அவர் தரும் கருத்தமைதி வருமாறு: தொல்காப்பியர் ஜமதக்கினி முனிவரின் மகன் என்றும், அகத்தியரின் மாணவர் என்றும் நூற்களில் கூறப்பட்டுள்ளார். எனவே அகத்தியர் இராமரின் சம காலத்தவர்

ஆகிறார். மேலும் அவர் ஜமதக்கினி பரசுராமர், தொல்காப்பியர் ஆகியோருக்கும் சமகாலத்தவர். ஆனால் தொல்காப்பியர் தம் தந்தைய-ராகிய ஜமதக்கினியைப் பற்றியோ, குருவாகிய அகத்தியரைப் பற்றியோ ஏதும் கூறவில்லை. ஆகவே, அகத்தியரைத் தொல்காப்பியரின் குரு எனும் புராணக் கதை வரலாற்றுண்மைக்குப் புறம்பானது. இவை வட நாட்டுப் புராணங்களிலும், இருக்கு வேதத்திலும் வரும் அகத்தியரைப் பற்றிப் பிற்காலத்து எழுந்த கட்டுக்கதைகளே எனல் பொருத்தமாகும்

இமய மலை பற்றி மேற்குறிக்கப்பட்ட கதைகளில் அதிகம் இடம் பெறுபவர் சிவ பெருமான், பார்வதி, கயிலாய மலை, அகத்தியர். சிவ-பெருமான், பிந்திய வேதங்களில் ருத்ரன் என்ற பெயருடன் தோன்று-கிறான். இப்படிப் பழங்கால இலக்கியங்களிலும், புராணங்களிலும் வரும் சிவபெருமான் தமிழர் கடவுளா, வட இந்தியரால் தமிழகத்தில் புகுத்தப்பட்ட மாற்றார் கடவுளா என்ற வினா எழுதல் இயற்கை. சிவபெருமான் பசுபதியாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளான். கோபத்தால் எழும் அழிவின் நாயகனாகவும் வருணிக்கப்படுகிறான். இன்று தமி-கத்தில் சிறப்புற்று விளங்கும் லிங்க வழிபாடு இக்கடவுளைப் பற்றியது. லிங்க வழிபாடு ஆரியருக்கு முன்பிருந்தே இந்தியாவில் இருந்த ஒரு வழிபாட்டு முறை. இம்முறை திராவிடருக்குரிய தனி வழிபாட்டு முறை, அவ்வாறு கூறுவதாயின் சிவபெருமான் திராவிடர் கடவுளா என்பது வரையறுக்கப்படுதல் வேண்டும். அதற்கு முன் நாம் சிந்து மக்கள் திராவிடர்களா? சிந்து மக்கள் வணங்கிய பசுபதியே சிவபெருமானா, தமிழர் திராவிடர்களா? என்ற வினாக்களுக்கு விடை அளிக்க வேண்டும். இன்று இருக்கும், நிலையில் சிந்து மக்கள் திராவிடர்களே; அங்குக் கிடைத்த பசுபதியே சிவபெருமான். இவற்றைப் பின் பற்றும் தமிழர் திராவிடரே. எனவே, சிவபெருமான் திராவிடர்க் கடவுளே என்று கருதுவதற்கு அகழ்வு ஆய்வுச் சான்றுகள் பல நமக்கு கிடைத்-துள்ளன.

(தொடரும்)

திருவாசகத்தில்

"ஐயாறதனிற் சைவனாகியும்"*

என்றதன் வரலாறு.

சோழநாட்டிற் சிவக்ஷேத்திரங்களுள் ஒன்றாகிய பஞ்சநதம் என்னுந் திருவையாற்றிலே திருக்கோயில் கொண்டெழுந்தருளி-யிருக்கும் பஞ்சநதேசுரரை அருச்சனை செய்து வரும் ஆதிசைவப் பிராமணர்கள் இருபத்து நால்வராவர்

அவருள்ளே யொருவர் கங்கா ஸ்நானஞ்செய்யும் பொருட்டுக் காசியாத்திரை சென்று நீண்ட நாளாகத் திரும்பிவராதிருந்தனர். அது-கண்டு அவருடைய காணி முதலிய வருவாய்களை ஏனைய இருபத்து மூன்று அருச்சகரும் பங்கிட்டுச் சாதனமெழுதி அனுபவிக்கத் தொடங்-கினர். காசியாத்திரை சென்றவரது மனைவி/தன்/மைந்தனுடனே அதைத் தெரிந்து அவ்விருபத்து மூவர் சபைக்கட் சென்று என்னுடைய காணியை நீங்கள் அபகரிப்பது தகுதியல்லவென்று தடுத்தனர். அவர்கள் அவளை நோக்கிப் பிள்ளையில்லாதவன் காணியை ஞாதியர்கள் எடுத்துக் கொள்ளுவது நியாயமென்று கூறி மறுத்தலும், அவன் 'யாத்திரை சென்றவர் மனைவியாகிய யானுமிருக்கின்றேன்; பிள்ளையும் இருக்கிறது; அவருமினிமேல் வந்து விடுவர்; நீங்களிந்தக் கேடு செய்ய வேண்டா'' என்று மிகவும் வற்புறுத்தி மறுத்தனள்.

இருபத்து மூவரும் அதை அங்கீகரியாமல் பெண் காணியாளுவாயோ வென்று அவளைப் பிடரியைப் பிடித்துத் தள்ளச் சொன்னார்கள். உடனே காணியிழந்த அம் மாதர்சிகாமணி அவர்களைப் பார்த்துப் பூமியை யாளுகின்றவர் வலிமை செய்தால் நிலைத்து நிற்கமாட்டர்கள் விண்ணுலகத்தை யாளுகின்றவரு மிங்ஙனம் அநீதி செய்யார்கள். பஞ்சநதேசுரர் பிரத்தியக்கமாகிய சாட்சியாக விருக்கின்றார். நீங்களுந் தெரிவீரென்று சொல்லிவிட்டு மனங்கலங்கி வாடிவந்து பஞ்சநதேசுரர் கோயிலின் முன்னே நின்று 'ஆதாரமில்லாதவருக்கு ஆதாரமானவரே மார்க்கண்டனுக்காகய மணையுதைத்தருளிய பெருமானே, திருவை-யாறுடையவரே, முற்றத் துறந்தவருக்குத் துணையாயுள்ளவரே பயந்-தவருக்குப் புகலிடமானவரே! வேறொரு துணை காணேன் உம்முடைய திருவடித்தாமரைகளுக்கடைக்கலம் என்று பலவாறாகத் துதித்து, வஞ்ச-கராகிய ஞாதிகள் செய்யுங் கணக்கழிவு கண்டீரோ. இது முறையோ வென்று தேம்பி நின்றழுதனள். அவளுடைய குழந்தையுமவ்வாறே

---

* செந்தமிழ் - தொகுதி : 3. பகுதி10.

அழக்கண்ட கருணைநிதியாகிய பஞ்சநதேசுரர் திருவுளமிரங்கி அழிவழக்குச் செய்யுஞ் சிவப்பிராமணரபகரித்த காணி முதலியவற்றை உடையவருக்குச் சேரச்செய்யும் பொருட்டுத் திருவையாற்றுக்குப் பக்கத்திலுள்ள விளாங்குடி யென்னுங் கிராமத்தில் காசியாத்திரை சென்ற சிவப்பிராமணரைப் போல் விபூதி உருத்திராக்கமுதலிய சிவசின்னங்களைத் தரித்துக் காசிக்கங்கை கட்டிய காவடியைத் தோளிலே சுமந்து திருவையாற்றுக் கெழுந்தருளிவந்து காணியை வஞ்சித்துக் கொண்டவருக் கெதிரே நின்று பஞ்சநதேசுரரும் அறம்வறர்த்தநாயகியும் விநாயகர் குமரக்கடவுளும் நீங்களுஞ் சுகமாக விருக்கின்றீர்களாவென்று வினவி அவர்களைத் தழுவிக் கொண்டனர் அப்பொழுது அவர்கள் நாணமடைந்து நின்றனர். அதன்மேல் என்னுடைய காணியை இல்லை யென்றவர் யாரென்று காசிவாசியாகிய பிராமணர் கேட்க. நாங்கள் செய்த பிழையைப் பொறுத்தருளுமென்று இருபத்து மூன்று பிராமணரும் பிரார்த்தித்தனர்.

இந்தச் சமயத்திலே மனைவியும் புத்திரனும் வந்து பிரிவாற்றாமைக்குங் காணியிழந்தமைக்குமாக நொந்தழுது நின்றனர். அவ்விருவரையுந் தேற்றி இருப்பிடத்துக்குப் போகப் சொல்லி மீண்டும் காசிவாசியாகிய மறையோர் சூரியபட்கரணி தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து விபூதிதரித்து நித்தியகன்ம முடித்துக் கோயிலினுட் சென்று பஞ்சநதேசுரரைப் பூசிக்கவேண்டுந் திருப்பள்ளித் தாமமுதலானது கொணர்வித்துக் கங்கைநீரையெடுத்துத் திருமுடிமேலபிடேகஞ் செய்து திருவொற்றாடை சந்தனங்குங்குமம் புட்பமுதலியவை சார்த்தியலங்காரஞ்செய்து சோடசோபசாரத்தால் அருச்சித்துப் பின்னர் அறுசுவையவாகிய நால்வகையுண்டிகளை யமைப்பித்து மயேசுரபூசைசெய்து அதன் மேல் பஞ்சநதேசுரரை நிவேதிப்பித்துப் பூசனை முடித்து வெளியே வந்து சிவாசாரியருடைய பொதுமடத்தில் வீற்றிருந்தருளினர்.

அப்போது காசியாத்திரை சென்றிருந்த அருச்சகராகிய சைவரும் கங்கை நீர்தாங்கிய காவடியெடுத்துக்கொண்டு சைவாசாரியர்களிருக்குஞ் சபைமுன்னே வந்து நின்றனர். அச்சபையின்கணுள்ளாரெல்லாரும் இஃதென்னஅற்புதமென்று வியந்து மயங்கினர். மனைவியு மைந்தருங்கண்டு திகைத்து நின்றனர். முன்வந்த சிவாசாரியர் நீர்யாவரென்று பின்வந்தவரை வினவலும் அவர் எம்பிரான் பூசைசெய்யுமிருபத்து நால்வரிலொருவன்; முதல்பூசை செய்தற்கு முரியனென்றனர். அது கேட்ட திரிநேத்திரதாரியாகிய ஆசாரியர் கோபங்கொண்டு பற்பல

விதத்தாலவரைத் துன்புறுத்தினர். அவர் அழுதுகொண்டு போய்த் தமக்குரிமையாகிய சாதனங்களையெடுத்துத் தந்து காட்டினர். அதுபோலவே பெரும்பாலும் வேண்டிய சாதனங்களெல்லாந் தம்மிடத்திலிருந்து எடுத்துக் காட்டினர். இவ்விருவர் சாதனங்களையுஞ் சபையின்கணுள்ளாரும், ஏனையோரும் பார்த்ததிசயித்து முழுவதும் ஒத்திருந்த போதிலும் சிறிது வேறுபாட்டால் மெய்ச்சாதனத்தையே பொய்ச் சாதனமெனக் கூறினர். பெருமானாகிய ஆசாரியர், சைவர்கள் வெற்றி யாருடைதென்று வினவலும் அவர்கள் உம்முடையதே யென்றனர்.

உடனே பஞ்சநதேசுரராகிய சைவாசிரியர் திருவுருவ மறைந்து ஆகாயத்தினின்று சைவர்களே, நம்மையர்ச்சிக்குஞ் சைவனாகிய இவனுக்குக் காணிமுதலிய எல்லா உரிமையுமிரண்டு பங்குகொடுத்து நீங்களும் நீடூழி வாழ்வீரென்றருளிச் செய்தனர். அத்திருவாக்கைச் சபையாரும் பிறருங் கேட்டுத் திருவருளை வியந்து பணிந்து பரவசமாயினர்.

இச்சரிதந் திருவையாற்றுப் புராணத்திலே சைவசருக்கத்திற் கண்டது. இது நிகழ்ந்தகாலந்தொட்டு இன்று காறும் திருவையாற்று மகோற்சவத்தில் பஞ்சநதேசுரர் தம்மைத்தாமருச்சித்த அற்புதம் ஐந்தாந்திருவிழாவில் நடத்தப்பட்டு வருகிறது.

சேர மரபு

பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்
— நாகர்கோவில்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

வீரம் : சேரர் வீரத்தில் செறிந்தவர். அவரது வீரமும் கொடையும் யாராலும் புகழத்தக்கவைகளாக இருக்கின்றன. சேரன் செங்குட்டுவன் வடநாட்டு அரசர்கள் ஆகிய கனக விசயர்களோடு பொருது கண்ணகிக்கு எடுத்த கல்லை அவர் தலைக்கு ஏற்றிச் சுமப்பித்த செய்தியைச் சிலப்பதிகாரம் அழகாகக் கூறுகின்றது.

'பலர்மொசிந் தோம்பிய திரள்பூங்கடம்பின்
கடியுடை முழுமுதல் துமிய ஏஎய்
வென்றெறி முழங்குபணை செய்த வெல்போர்
நாரரி நறவின் ஆரமார்பின்
போரடு தானைச் சேரலாத'

(பதிற் 2-1)

என்பதனுல் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் பகைவர்களால் காக்கப்பட்ட கடப்பமரத்தைச் சிதைத்து, அம்மரத்தால் முரசு செய்த வரலாறு விளங்குகின்றது. பிறவிடங்களிலும் இவ்வரலாறு சொல்லப்பட்டிருக்கிறது

'எழுமுடி கெழீஇய திருஞெமரகலத்து
நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை'

(பதிற் 2-4)

'அமர்கடந்து மலைந்த தும்பைப் பகைவர்
போர் பீடழித்த செருப்புகன் முன்ப.'

(பதிற். 2-4)

'கூற்று வெகுண்டு வரினும் மாற்றும் ஆற்றலையே'

(பதிற்- 2-4)

'அமைவர லருவி யிமயம் விற்பொறித்
திமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத்
தண்கோல் நிறீஇத் தகைசால் சிறப்பொடு
பேரிசை மரபி னுரியர் வணக்கி
நயனில் வன் சொல்யவனர்ப் பிணித்து
நெய்தலைப் பெய்து கைபிற்கொளீஇ

அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு
பெருவிறன் மூதூர்த் தந்து பிறர்க்குதவி
அமையார்த் தேய்த்த அணங்குடை நோன்றாள்
இமைய வரம்பன் நெடுஞ்சேரலாதன்'

(பதிற். 2 பதி)

நிவந்து கரையிழிதரு நனந்தலைப் பேரியாற்றுச்
சீருடை வியன்புலம் வாய் பரந்து மீமிசையர்
உவலை சூடி உருத்து வருமலிர் நிறைச்
செந்நீர்ப் பூசலல்லது
வெம்மை யரிதுநின் னகன்றலை நாடே''.

(பதிற். 3-8)

என்பதனால், சேரர் நாட்டிற் பிறர் படையெடுத்து வாரார் என்பது விளக்கப்படுகின்றது.

'புலங்கெட நெரிதரும் வரம்பில் வெள்ளம்
வாள்மதிலாக, வேல்மிளை அயர்த்து
வில் விசை உமிழ்தந்த வைம்முள் அம்பின்
செவ்வா யெஃகம் வளைஇய அகழின்
காரிடி உருமின் உரறு முரசின்
கால்வழங் காரெயில் கருதின்
பேரெதிர் வேந்தர் ஒரூஉப நின்னே'

(பதிற் 4-3)

என்பதனால், ஏனைவேந்தர் சேரரை அஞ்சியிருந்தமை புலனும். அரண் முதலியன இல்லாவிடத்தும் வாள் முதலிய படைகளாலேயே அரண்-செய்து கொள்ளும் சேரர் திறமையும் இதனால் வெளிப்படுவது காண்க.

'துளங்குகுடி விழுத்துணை திருத்தி முரசுகொண்டு
ஆண்கடனிறுத்த நின் பூண்கிளர் வியன் மார்பு'

(பதிற் 4—1)

என நார்முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் புகழ்கின்றனர். வேற்றரசர் தம் நாட்டைச் செவ்வையாய் ஆளாமையால் அவரைத் தோற்பித்து அவர் முரசு கொண்டு, அந்நாட்டுக் குடிகள் இன்புறும் வண்ணம் அரசாண்டனர், இச்சேரர் பெருமான்.

'ஊழிஞகிய உயர்பெருஞ் சிறப்பின்
பூழிநாட்டைப் படையெடுத்துத் தழீஇ
உருள்பூங்கடம்பின் பெருவாயில் நன்னனை
நிலைச் செருவினாற்றலை யறுத்தவன்
பொன்படுவாகை முழுமுதல் தடிந்து
குருதிச்செம்புனல் குஞ்சர மீர்ப்பச்
செருப்பல செய்து செங்களம் வேட்டுத்
துளங்குகுடி திருத்திய வளம்படு வென்றிக்
களங்காயக் கண்ணி நார்முடிச் சேரல்'

(பதிற் 4-பதி)

என்பதனல் நார்முடிச் சேரல் பூழிநாட்டை வென்று கொண்டமையும் நன்னன் என்பவன் பாதுகாத்துவந்த வாகைமரத்தைத் தடிந்து அவனை வென்றமையும் அறியப்படுகின்றன.

'நெடுமடல் சாயக்கொடுமிடல் துமியப்
பெருமலை யானையொடு புலங்கெட விறுத்து'.

(பதிற். 4-2)

என்பதனல் அச்சேரன் அதியமான் நெடுமானஞ்சியை வென்றமை அறியப்படும். அதியமான் சேரர்கீழ் அரசாண்டிருந்தவனும் ஔவை-யாரை ஆதரித்தவனுமாகிய ஒருவீரன்,

'பொன்னங்கண்ணிப் பொலந்தேர் நன்னன்
சுடர்வீ வாகைக் கடிமுதல் தடிந்த
தார்மிகு மைந்தி ஞர் முடிச் சேரல்'

(பதிற். 4-10)

என்பதனலும் நன்னன் வாகையைச் சேரன் எறிந்தது பெறப்படும்.

'விழுமியோர் துவன்றிய வன்கணுட்பின்
எழுமுடி மார்பி னெய்திய சேரல்'

(பதிற் . 5-5)

என்பதனல் சேரன் செங்குட்டுவன் பகைவர் எழுவரை வென்று அவர். தம் முடிப்பொன்னற்செய்த ஆரத்தைமார்பில் அணிந்தமை பெறப்படும்

'ஆராச் செருவிற் சோழர்குடிக் குரியோர்
ஒன்பதின்மர் வீழ வாயிற் புறத்திறுத்து
நிலைச்செருவினாற் றலை அறுத்து

(பதிற். 5 பதி)

என்பதனால் அச்சேரன் சோழர் குடிக்குரியோர் ஒன்பதின்மரை அழித்த வரலாறு அறியப்படுகின்றது.

இவனைக் 'கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன்' என்பர் முழங்கு திரைப் பனிக்கடல் மறுத்திசினோர்...... தானை மன்னர் இனியாருளரோ'

(பதிற். 5-5)

என்பது முதலியவற்றானும் சேரன் கடலைப் பிறகோட்டியது உணரப்படும் கடல் பிறக்கு ஓட்டுவதாவது கடல் தன்னாற்றலுக்குப் பின்னிடும் படி அக்கடலிற் சென்று போர் செய்வதாம். இனி, 'கடன் மறுத்தல் என்றது கடலிற்புக்கு ஒருவினை செய்தற்கு அரிது என்பதனை மறுத்தலை என்ற அதன் உரையாலும் அறியப்படும்.

சேரன் செங்குட்டுவன் வட நாட்டு அரசரை வென்றமை ''ஆரிய' அண்ணலை வீட்டிப் பேரிசை இன்பல் அருவிக் கங்கை மண்ணி இனந்தெரி பல்லான் கன்றொடு கொண்டு,

(பதிற்.பதி -5)

என்பதனால் விளக்கும்

'கோடுநரல் பௌவம் கலங்க வேலிட்
டுடைதிரைப் பரப்பிற் படுகடலோட்டிய
வெல்புகழ்க் குட்டுவன்!

(பதிற். 5-6),

என்பனவும் குட்டுவன் கடன்மறுத்த செய்தி செப்புவன, குட்டுவனைக் கடற்கு உரிமை செய்து 'பரதவ' எனப் புலவர் அழைக்கும் நயம் இன்புறத்தக்கது.

... ... 'நீர்புக்குக்
கடலோ டுழந்த பனித்துறைப் பரதவ''

(— பதிற் 5.8)

செங்குட்டுவன் பழையன் என்பவனை வென்று, பகைவேந்தர் பெண்களது கூந்தலை அறுத்து வடம்செய்து அதனால் யானைகளை சகடத்திற் பூட்டிச் சகடம் இயக்கினவன். இவ்வரலாறு,

'பழையன் காக்குங் கருஞ்சினை வேம்பின்
முழாரை முழுமுதல் துமியப் பண்ணி
வாலிழை கழிந்த நறும்பல் பெண்டிர்
பல்லிருங் கூந்தல் முரற்சியான்
குஞ்சர ஒழுகை பூட்டி.' (பதிற் 5 பதி)

என்பதனால் விளங்குகின்றது. பழையன் காத்த வேம்பும் சோனால் முதல் தடியப்பட்டது.

மோகூரில் 50 வேந்தரும் வேளிரும் வஞ்சினங் கூறி எழுந்த போரில் செங்குட்டுவன் வென்ற வெற்றி பண்டை இலக்கியங்களில் புகழப்படுகின்றது.

'வெல்போர் வேந்தரும் வேளிருமொன்று மொழிந்து
மொய்வளஞ் செருக்கி மொசிந்துவரு மோகூர்.
வலப்படு குழூஉநிலை யதிர மண்டி
நெய்த்தோர் தொட்ட செங்கை மறவர்
நிறம்படு குருதி நிலம்படர்ந் தோடி
மழைநாட் புனலி னவற் பரந்தொழுகப்
படுபிணம் பிறங்கப் பாழ்பல செய்து
படுகண் முரசம் நடுவட் சிலைப்ப
வளனற நிகழ்ந்து வாழுநர் பலர்படக்
கருஞ்சினை விறல்வேம்பு அறுத்த
பெருஞ்சினக் குட்டுவன்.'

(பதிற் 5·9)

'மோகூர் மன்னன் முரசங் கொண்டு
நெடுமொழி பணித்தவன் வேம்பு முதல் தடிந்து
முரசு செய முரச்சி'

(பதிற் 5·4)

இதில் குட்டுவன் தான் அறுத்த வேம்பால் முரசு செய்தமை அறியப்படும். பகைவேந்தர் காக்கும் மரங்களை அழித்து முரசு செய்வது

பண்டை அரசர் வழக்கு. கடம்பறுத்த வேந்தனும் அதனால் முரசு ஆக்கினன். ஈண்டு மோகூர் மன்னன் என்றது பழையன் என்பவனை.

ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் தண்டகாரணியத்துக் கொள்ளப் பட்ட தொரு வடவர்க்கு அஞ்சாது தன்னாட்டுத் தொண்டியிற் கொணர்ந்தான். இவன் தந்தையைப் போலப் பேர் விளங்கினவன்.

'தண்டகா ரணியத்துக் கோட்பட்ட வருடையைத்
தொண்டி யுட்டந்து ...
வான வரம்பன் எனப் பேரினிது விளக்கி'.

(பதிற். 6-பதி)

என்பது காண்க. இவன் செங்குட்டுவனுக்குப் பின் அரசாண்டவன்

'ஒருமுற்றிருவ ரோட்டிய ஒள்வாள்
செருமிகுதானை வெல் போரோயே'

(பதிற். 7-)

என்பதனால், செல்வக் கடுங்கோச் சோழபாண்டியரை ஒரே வளைப்பில் வென்ற வீரம் கூறப்பட்டிருக்கின்றது.

வீரரால் காக்கப்பட்ட தகடூரை அழித்து பெருஞ்சேரலிரும்-பொறை வெற்றி கொண்டார் என்ற வரலாறு

'வெல்போ ராடவர் மறம்புரிந்து காக்கும்
வில்பயி லிறும்பிற் றகடூர் நூறி'

(பதிற். 8-8)

என்பதனால் உணரப்படும்.

'உயிர் போற்றலையே செருவத்தானே'

(பதிற் 8-9)

என மேலும் அவ்வரசன் வீரம் புகழப்படுகிறது.

அவ்வரசன் அதிகமானை வென்ற வரலாறு 8 — ம் பத்து பதிகத்தில் கூறப்படுகிறது. 'பல் வேற்றானை யதிகமானோ டிருபெரு வேந்தரையு முடனிலை வென்று' என்பது காண்க.

'உய்தல் யாவது நின் உடற்றியோரே'

(பதிற் 9-4)

என 'நின்னைச் சினப்பித்தவர் பிழைப்பதரிது' என்று அச்சேரர் வீரத்தையும் வென்றியையும் புகழ்வது காண்க.

இளஞ்சேரல் இரும் பொறை விச்சி என்னும் குறுநிலமன்னனையும் பெருஞ்சோழனையும் பழையன் மாறனையும் வென்றமை பதிற்றுப்பத்து ஒன்பதாம் பத்தின் பதிகத்துக் கூறப்படுகின்றது.

யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல்இரும்பொறை என்னும்சேர-அரசர் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனோடு போர் புரிந்து. அவனால் கட்டுண்டு பின் அக்கட்டை மீறி வலிதில் போய்ச் சிங்காதனம் ஏறிய வீரர்

புறநானூற்றிலும் பிறநூல்களிலும் சேரர் வீரம், புகழ் முதலியன மிகுதியாகக் கூறப்பெற்றுள்ளன

செய்திக்கதிர்

தந்தை பெரியார் மீண்டும் பிறக்க வேண்டும்

நூற்றுக்கணக்கான ஆண்டுகள் மூடப்பழக்க வழக்கங்களில் ஊறிப் போய்விட்ட ஒரு சமுதாயத்தைத் திருத்துவது ஒரு யுகத்தில் முடிகின்ற காரியமாகத் தெரியவில்லை. 'கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப்போக' என்று சாபமிட்ட வள்ளலாரின் வாக்கு பொய்த்து விட்டதோ என்று நாம் வருந்த வேண்டியுள்ளது. குழந்தையைத் தாலாட்ட வந்த புரட்சிக் கவிஞர்

'மூடப்பழக்கம் முடைநாற்றம் வீசுகின்ற
காடு மணக்க வரும் கற்பூரப் பெட்டகமே'

என்று அதனை வாழ்த்துவார். இவற்றையெல்லாம் எண்ணுதற்குக் காரணமாகிய நிகழ்ச்சி குடந்தைக்கு அருகில் திருவிடைமருதூரில் சென்ற ஞாயிறன்று (செப்டம்பர் - 14) நடந்துள்ளது. கோவில் திருவிழாவில் தீ மிதிக்கிறேன் என்று விரதம் பூண்டிருந்த ஒரு தந்தை தான் மட்டும் அச்சடங்கினை நிறைவேற்றியிருக்கலாம். அந்த அறிவிலி ஏழு வயது, மூன்று வயது நிரம்பிய இரு குழந்தைகளைத் தன் இரு தோளிலும் ஒருவயதுக் குழந்தையை இடுப்பிலும் சுமந்து சென்றிருக்கிறார். நெருப்பிலே நடந்து புண்ணியம் சம்பாதிக்கின்ற ஆர்வம்! கொள்ளிக் கட்டைகளில் நடக்கும் போதே தடுமாறி விழுந்த தந்தையாரையும் குழந்தைகளையும், சுற்றியிருந்தோர் கைதூக்கி விட்டு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். மூன்று வயதுக் குழந்தை மட்டும் பரலோகம் சென்று விட்டது. இகலோகத்தில் இருக்கின்ற இந்த மாதிரிப் பேதைகளை எல்லாம் திருத்திக் கரை சேர்ப்பதற்கு தந்தை பெரியார் மீண்டும் பிறக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஈழத்துப் பெரியார் ஆபிரகாம் கோவூர் பெரியாரை ஒத்து பகுத்தறிவுக் கொள்கைகளைச் செயற்படுத்திக் காட்டியவர் மூடப்பழக்கங்களை அம்பலமாக்கும் அவருடைய இரண்டு நூல்களை பம்பாய் ஜெய்கோ நிறுவனத்தினர் அண்மையில் வெளியிட்டுள்ளனர். அவற்றைத் தமிழில் மொழி பெயர்த்து பட்டி தொட்டிகளில் எல்லாம் பரப்புகின்ற பணியினை தந்தை பெரியார் பிரச்சாரக் குழுவினர் செய்வது நல்லது.

முதலமைச்சரின் அறிவிப்பு

அண்மையில் கூடிய உலகத் தமிழ் மாநாடு பற்றிய உயர்மட்ட ஆலோசனைக் குழுவில் பேசிய மாநில முதலமைச்சர் மதுரையில் ஒரு தமிழ்ச் சங்கம் துவக்கப்படும் என்று அறிவித்தது ஒரு வியப்புக்குரிய செய்தியாகும். கடந்த எண்பதாண்டுகளுக்கு மேலாக இயங்கும் மதுரைத் தமிழ்ச் சங்கம் பாண்டித்துரைத்தேவர் அவர்களால் 1901-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டதாகும். தொடக்க காலத்தில் மன்னர்களும், செல்வந்தர்களும் அதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துச் சிறப்பித்தார்கள். தமிழ்ச்சங்கத்துக் கென்று அரசினர் உதவி இல்லை. இருப்பினும் சங்கத்தின் மரபும் பாரம்பரியமும் கெடாமல் ஒரு செந்தமிழ்க்கல்லூரி நூலகம் ஆகியவற்றை சங்கம் நடத்தி வருகிறது. எண்ணாயிரம் நூல்களைத் தன்னகத்தே கொண்ட இச்சிறந்த இந்நூலகத்திற்கு வெளிநாட்டு ஆராய்ச்சியாளரும் வந்து குறிப்பெடுத்துச் செல்லுகின்றனர். வணிக நோக்கம் இன்றி மதுரைத் தமிழ்ச்சங்கம் செந்தமிழ் என்னும் இலக்கிய ஏட்டினையும் நடத்தி வருகின்றது.

ஓலைச் சுவடிகளில் உள்ள அரிய பல நூல்களை வெளியிடுகின்ற பணியில் தமிழ்ச்சங்கம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. கலைக்களஞ்சியம் ௧-ஆம் தொகுதியில் இதுவே நான்காம் தமிழ்ச் சங்கம் என்ற செய்தியும் குறிக்கப்பட்டுள்ளது. நிலைமை இவ்வாறிருக்க, இதனை நான்காம் தமிழ்ச் சங்கம் என்று அழைக்கலாமா என்று வினா எழுப்பப் பட்டது வியப்புக்குரியதுமன்றி வேதனைக்குரியதாகவும் உள்ளது. அறிஞர் பெருமக்களும், செந்தமிழ் அன்பர்களும் இதனை அரசினரின் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டும்.

> ''நல்லது செய்தல் ஆற்றீராயினும்
> அல்லது செய்தல் ஓம்புமின்''

— புறநானூறு

நூல் மதிப்புரை :

ஜெர்மனியில் தமிழ் இலக்கண நூல்

ஏட்டுச் சுவடியிலிருந்த இன்றமிழை அச்சுக்குக் கொண்டு வந்த அரும்பணி ஏறத்தாழ முடிந்து விட்டதென்றே நம்மில் பலர் எண்ணிக் கொண்டிருக்கிறோம் அதுமட்டுமல்ல குறிப்பு மட்டும் கிடைத்து முழுதும் அச்சுக்கு வராத பழந்தமிழ் நூல்களைப் பற்றிப் பேசும்போது 'வாரணங் கொண்டதந்தோ வழிவழிப் பெயரும் மாள' என்று கையறு நிலை பாடி விடுகிறோம். உண்மை அதுவன்று. லண்டனிலும், பாரிசிலும் உள்ள பெரும் நூலகங்களில் அச்சுக்கு வராமல் இருக்கும் ஏட்டுச்சுவடிகளும், எழுத்துப் பிரதிகளும் நூற்றுக்கணக்கில் உள்ளன. இவற்றுள் பிரிட்டிஷ் நூலகத்தின் கீழ்த்திசைப் பிரிவில் காணப்பட்ட ஒரு காகிதப்பிரதியே முதன்முதலாக அச்சுக்கு வந்திருக்கிறது. மயிலைநாதர், சிவஞான முனிவர், ஆறுமுகநாவலர் ஆகியோரின் காண்டிகை, விருத்தியுரை என்றின்ன நன்னூல் விளக்கப் பட்டியலில் புதிய உரை இது கூழங்கைத் தம்பிரானின் இந்த விளக்கமும் உரையும் இதுவரை வெளி வராத ஒன்று. பழம்பெரும் பதிப்பாசிரியர்களான சி. வை. தாமோதரம்பிள்ளை, உ. வே. சா. ஆகியோருடன் ஒருங்கு வைத்து எண்ணத்தகும் இந்த அரிய தொண்டினைச் செய்தவர் மேற்கு ஜெர்மனியில் தமிழ்ப்பணியாற்றும் டாக்டர் அ. தாமோதரன் ஆவார் இந்த அரும்பணிக்குப் பெரும்பொருள் கொடுத்து ஊக்கிய ஹைடல்பர்க் பல்கலைக்கழகத்தையும். பேராசிரியர் பெர்கர் அவர்களையும் நாம் பாராட்டத்தான் வேண்டும்.

இரண்டு முதல் ஏழீருக தொகைநிலைத் தொடர்மொழிகள் மயங்கும் என்பதற்கு இந்த உரைகாரர் பரந்துபட்ட விளக்கமும் சான்றுகளும் தந்துள்ளார். (நூற்பா. 22) ஆகுபெயருக்கும் அன்மொழித் தொகைக்கும் உள்ள வேறுபாட்டினைக் காட்ட ஆறுமுக நாவலரும், ஏனைப்பிற்றைநாள் உரைகாரர்களும் பெருமுயற்சி எடுத்துள்ளனர். கூழ்ங்கைத் தம்பிரான் 'தோள்குழல் துடியிடை ஆய இவ்வன்மொழித் தொகையும் ஆகுபெயர் என்பாருமுளர். அது தொடர்மொழியே'' என்று சுருங்கக் கூறி, அவை ஆகுபெயர் அல்ல என்று தள்ளிவிடுகிருர். இம்மறுப்புரை மயிலைநாதர் கூற்றினை ஒத்து அமைகின்றது. எனவே கூழங்கைத் தம்பிரானும் ஏனை உரையாசிரியர்களைவிடக் காலத்தால் முந்தியவரோ என்று எண்ணவேண்டியுள்ளது. நிரல்நிறைப் பொருள்-

கோளின் பல்வேறு வகைகளும், அவைகளுக்குக் கொடுக்கப்பட்ட சான்றுகளும், மயிலைநாதர், வை மு. கோ. ஆகியோரின் காண்டிகை உரையினும் சீரிதாக அமைந்துள்ளது சொல்லுக்கு அடைமொழி முன்னால் வரும் தொடர்ந்துவரும் கருத்துக்கு அடைமொழி பின்னால் வரும். இதுவே மரபு இதனைப் புறனடை என்று கூறுதலே இலக்கிய வழக்கு. ஆயின் இப்பதிப்பில் கையாளப்படும் 'புறநடை என்ற சொற்றொடர் எந்தவகையில் பொருந்தும் என்பது சிந்திக்கத்தக்கது

பதிப்பாசிரியரின் முன்னுரையில் அவரது அடக்கமும் இளிய எளிய இலக்கியக் கொள்கையும் தெற்றெனப் புலனாகின்றது கூழங்கைத் தம்பிரானின் உரை நயம் பற்றி ஆய்வு செய்தற்கு இப்-பதிப்புரை ஒரு தோற்றுவாயாக அமைந்துள்ளது மைக்ரோ பிலிம் பதிப்பாக இருந்தாலும், பிழைகள் ஏதுமின்றி திருத்தமாகவும் அழ-குறவும் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது. நூலகங்களில் அவசியம் இருக்க வேண்டிய இப்பதிப்பினை ஹைடல்பர்க் பல்கலைக்கழகம் வெளியிட்-டுள்ளது

தொடர்ந்து இத்துறையில் பணிபுரிந்து மேலும் பல புது நூல்-களை வெளிக்கொணருமாறு தமிழக பல்கலைக்கழகங்களும் அரசும் இந்நூலின் பதிப்பாசிரியருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தல் காலத்-தினாற்செய்யும் பணியாக அமையும்.

(ii) சங்கத்தமிழில் ஒரு காப்பியக் கரு

நூலின் பெயர் : அன்னி மிஞிலி-
ஆசிரியர் : கவிஞர். மு உலகநாதன்
வெளியீடு : முத்துச்சிதம்பரனார் பதிப்பகம்

அகநானூற்று மணிமிடை பவளத்தில் வரும் அன்னி மிஞிலி பற்றிய பரணர் பாட்டினை மையமாகக் கொண்டு எழுந்த ஒரு கற்பனைப் படைப்பே இக்கவிதை நூலாகும். சங்க கால நிகழ்ச்சியை சால்புற வெளிப்படுத்தும் இக்காப்பியத்தில் வரும் பாத்திரங்கள் அனைத்திற்கும் அழகான தமிழ்ப்பெயர்கள்; பயின்று வரும் நிகழ்ச்சிகள் அனைத்திலும் பண்டைத் தமிழ் நாட்டின் பண்பாடும் கலாச்சாரமும் தெளிவாகின்றன. கதையோட்டத்துக்கு அணி செய்யும் வகையில் ஏராளமான பழமொழிகள் நூல்முழுதும் பரந்து கிடக்கின்றன.

அகவலோடு கூடப்பிறந்த ஆற்றொழுக்குப் போன்ற நடை தங்கு தடையின்றி வருகிறது. ஆயினும் பக்கம்—12—இல் வரி: 15x—ஐ 'விந்தையை அன்னிபால் விளம்புவதெப்படி' என்று அமைத்தால் சிறப்பாக இருக்குமோ என்று தோன்றுகிறது. இலக்கிய ஒப்புமை பற்றிய அட்டவணை நூலின் இறுதியில் அச்சிடப்பட்டுள்ளது. அதில் காணப்பெறாததும், எமக்குத் தோற்றியதுமான இரண்டு கீழே குறிக்கப்பட்டுள்ளன.

(i) பக்கம் : 41-எல்லாம் அந்த இறைவன் .... நலிந்தனர்'-

> ''எல்லாம் கடவுள் செயல் என்று தொடை நடுங்கும்
> பொல்லாங்கு தீர்த்துப் புதுமை செய வந்தவளே''
>
> —பாரதிதாசன்

(ii) பக்கம் : 102- நீரின் தன்மையை ....எடுத்துக் கொணரும்'

> ''நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
> சாரச் சார்ந்து தீரத்தீரும்; சாரல் நாடன் கேண்மை
> சாரச் சாரச் சார்ந்து தீரத்தீரத் தீர்பொல்லாவே''
>
> -ஐங்குறுநூறு

மஞ்சு விரட்டு பற்றிய சுவையான விளக்கம் (18 - 19) படித்து இன்புறத்தக்கது.

கோட்டுப்பலவின் பழத்தைச் சிறு காம்பு தாங்குதலை மிஞிலி தமிழ்க் குலத்தைத் தான் தாங்குவதற்கு ஒப்புமைப்படுத்திக் கூறும் உவமை நயம் பாராட்டத்தக்கது. ''கலத்தும் உண்ணேன்; வாலிதும் உடேன்'' என்ற மிஞிலியின் சூளுரை பக்கம் : 78, 120, 125, 157 ஆகிய இடங்களில் பலபேர் கூற்றாக வரினும், கூறியது கூறல் போல் தோற்றுகிறது. சூளுரையினை அப்படியே சொல்லாமல் சற்றே மாற்றியிருக்கலாம். ''ஆன்முலை அறுத்த அறனில்லோர்க்கும்'' (பக்கம்-109) என்று வரும் புறப்பகுதியை அப்படியே எடுத்தாண்ட கவிஞர்' குரவர்த்தப்பிய கொடுமையோர்க்கும், என்ற வரியினைக் கொள்ளாது விடுத்தது வியப்பிற்குரியது சங்க இலக்கியத்தைப் புலவரே படிக்க இயலும். அதனின்றும் கிளைத்த இந்த அழகு தமிழ்க் கவிதை நூலை அனைவரும் படிக்கலாம். கவிஞரின் தமிழ்த்தொண்டும் கவிதை வளமும் வாழ்க! வளர்க!

—பழநி. அரங்கசாமி

மணியம் பிரஸ்,
44-B, வெங்கடபதி அய்யங்கார் தெரு
மதுரை-9.